செந்தமிழ்

தொகுதி—74 ஜூன் பகுதி - 2

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

ஆசிரியர்;
டி. பி. எம். பெரியசுவாமி

உள்ளுரை

எண்	பொருள்	பக்கம்
1.	இலக்கியத்தில் இமயமலை —கு. சதாசிவன்	50
2.	வள்ளுவரும் குறளும்	61
3.	ஈழம் ஈந்த சைவப் பெரியார்— —பழனி அரங்கசாமி	69
4.	சேரமரபு— —பண்டித இராமசுப்பிரமணிய நாவலர்	76
5.	கடலைப்பற்றி— —திரையன்	86
6.	நாட்டுத் தெய்வங்கள் — — க. சின்னப்பா	92
7.	செய்திக்கதிர் —	103

ஆசிரியர் பக்கம் :-

அன்புடையீர்! வணக்கம்.

நாவலர் எழுதும் சேரமரபு பற்றிய கட்டுரையின் தொடர்ச்சி இவ்விதழில் இடம் பெறுகிறது. இமயத்தைப் பற்றி பல்வேறு கோணங்களில் ஆய்ந்து பார்க்கும் கட்டுரையின் முதல் பகுதி, நாட்டுப் புறத் தெய்வ வழிபாடு பற்றிய தொடர் கட்டுரை ஆகியனவும் சுவைபட அமைந்துள்ளன. முந்தைய இதழ்களில் கூறியாங்கு, ஒரு விஞ்ஞானக் கட்டுரை இவ்விதழை அலங்கரிக்கின்றது. செந்தமிழைப் படித்து வரும் அன்பர்கள் இது பற்றிய கருத்தினை எமக்குத் தெரிவித்தால், இனியும் இது போன்ற சிறு கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிட இயலும். கவிதைகள் செந்தமிழில் இடம் பெறுவதில்லை என்பது அண்மைக்காலத்திய குறை. இது விரைவில் நிறைவு செய்யப்படும்.

சைவப் பெரியார் சிவபாத சுந்தரம் அவர்களைத் தமிழ் கூறு நல்லுலகத்தில் சிறப்புற அறிமுகப்படுத்தப்படவேண்டும் என்ற ஆர்வத்தின் வெளிப்பாடு தான் 'ஈழம் ஈந்த பெரியார்' என்ற கட்டுரை. சைவப் பெரியார் எழுதிய நூல்களின் சுருக்கத்தைத் தொடர்ந்து வெளியிடும் எண்ணம் உள்ளது.

தமிழன்பர்களின் வாழ்த்தும் வரவேற்பும் செந்தமிழுக்கு எப்போதும் உண்டு என்ற உளமார்ந்த நம்பிக்கையோடு இந்த இதழும் வெளியிடப்படுகிறது.

வணக்கம். — ஆசிரியர்.

இலக்கியத்தில் இமயமலை

கு. சதாசிவன், M. A, M. phil
மதுரைப்பல்கலைக்கழகம்

முன்னுரை :

பன்னெடுங்காலமாக இந்தியர் இமயத்தைத் தெய்வீக மலையாகப் போற்றினர். அம்மலையின் சிறப்பினைப் பாடிப்புகழ்ந்தனர். அதன் பனிபடு நெடுவரைகளையும் அங்கிருந்து உற்பத்தியாகி விசையுடன் பாயும் பேராறுகளையும், பொலிவுடன் தோற்றமளிக்கும் அதன் செழிப்பான பள்ளத்தாக்குகளையும், என்றும் எப்போதும் மக்களால், தொழப்படும் புண்ணியத்தலங்களையும், மலையில் வாழும் விலங்கு இனங்களையும், நறுமணம் வீசும் பூ வகைகளையும் மூலிகைகளையும் பாடிப் புகழாத புலவரில்லை. அம்மலையின் கண்ணுறைந்து நடமாடி உலகை இயக்கும் இறைவனைப் போற்றாதாரில்லை. இமயத்தை 'பனியின் உறைவிடம்' என்றும் 'பனி படிந்த நெடுவரை' என்றும், முனிவர்கள் தவம் புரியும் தபோவனம் என்றும் நமது முன்னோர் கண்டனர். எக்காலத்தும் நிலைத்து நிற்கும் இம்மலையை 'அழியாக் கோலம்' என்றும் 'அழியா அழகு என்றும் வருணித்தனர். இது அவர்களுக்கு ஓர் அழகுப் பொருள், துதிப் பொருள், வழிபாட்டுப் பொருள் வாழ்த்தும் பொருள், தேவனும் தேவியும் அங்கு இருப்பதால் நாம் அதனை வழிபடுகிறோம்; புண்ணிய தலங்கள் பல சுற்றியிருப்பதால் அதனை நாம் வாழ்த்துகிறோம்; அழகிய தோற்றங்களிருப்பதால் நாம் அதனை வருணிக்கிறோம்.

மூலச்சான்றுகள்

இம்மலையைப் பற்றிய பல புராணக் கதைகள், நிலவியல் குறிப்புகள், வரலாற்றுச் செய்திகள், சமயச் சார்பான கருத்துக்கள் பழங்காலந்தொட்டு இந்தியத் துணைக் கண்டத்தில் பரவலாக இருந்து ஏறத்தாழ இரண்டாயிரம் மைல்களுக்குத் தென்பாலுள்ள தமிழகத்திலும் இக் கதைகளும் செய்திகளும் பரவி வந்துள்ளன. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு என்ற பண்டை இலக்கியங்களிலும், இரட்டைக் காப்பியங்களாகிய சிலப்பதிகாரம்,

மணிமேகலை ஆகியவற்றிலும் இமயத்தைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. தமிழ்க்காப்பியமாகியசிலப்பதிகாரத்தில் இம்மலை பற்றிய நிலவியல், புராண, சமய வரலாற்றுச் செய்திகள் பெருபளவு இருப்பதை அறிஞர் அறிவர். ஏறக்குறைய பத்து நூற்றாண்டுகள் வரை பிடிப்பு ஏற்படுத்திக் கொண்ட இக்கதைகள் தேவாரம், திருவாசகம், திருமந்திரம், நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம், பெருங்கதை, பெரியபுராணம் போன்ற சமய நூற்களில் இடம் பெற்றுள்ளமையையும் ஆய்வாளர் அறிவர். இந் நூறகள் சுட்டும் செய்திகள் பலவும் பகவத்கீதை, விஷ்ணு புராணம், ஹரிவம்சம், அமரகோசம், குமாரசம்பவம் போன்ற வடமொழி நூற்களில் காணக்கிடக்கின்றன. வேள்விக்குடி, பெரிய—சிறிய சின்னமனூர், தளவாய்ப்புரச்செப்பேடுகள் ஆகியனவும் இந்த இலக்கியச்சான்றுகளை உறுதிப்படுத்துகின்றன. காலத்தால் பிந்தியன ஆயினும் இவை வரலாற்றாய்வுக்குப் பெரிதும் பயன்படுவனவாயுள்ளன. இம் மூலச்சான்றுகளை முன் வைத்து இம்மலை பற்றிய செய்திகளை நிலவியல், புராண, வரலாற்று, சமய அடிப்படையில் சற்று ஆய்வோம்.

நிலவியல் :

'இமாலயம்' அல்லது 'இமம்' என்ற சொல் சீதத்தை அல்லது மிகக் குளிர்ச்சியைக் குறிக்கும் 'இமம்' என்ற சொல்லின் வழித்தோன்றல். அதாவது குளிர்ச்சியைக் குறிக்கும் பனிக்கட்டிகள் படிந்த அல்லது படர்ந்த மலை என்று பொருள்படும். இது வீழ்படிவுப் பாறைகளைக் கொண்ட மடிப்பு மலைத் தொடர்களால் ஆகியது. பாமீர் முடிச்சிலிருந்து இம்மலை தொடங்கி இந்திய துணைக் கண்டத்தின் வட, வடமேற்கு, வடகிழக்குத் திசைகளை நோக்கிப் பரந்து கிடக்கிறது. இது இந்தியாவை மாற்றாரிடமிருந்து காக்கும் இயற்கைக் காப்பரண்; பிற உலகிலிருந்து இந்தியாவைப் பிரிந்து ஏகாந்தத்தில் தவழ வைக்கும் மாசக்தி; இத் துணைக் கண்டத்தின் தேசிய ஒருமைப்பாட்டை வலுப்படுத்தும் தூண். இந்தியரின் வட–புலத்திறவு கோலின் சீரிய சிறப்பம்சங்களைப் பண்டைய தமிழரும் நன்கறிந்திருந்தனர்.

ஒரு நாட்டு வரலாற்றின் போக்கினை அந்நாட்டு நிலவியல் அமைப்பும், கால நிலையும், இயற்கையமைப்புகளும் நிர்ணயித்து விடுகின்றன என்பது வரலாறு புகட்டும் உண்மை. இவ்வுண்மையைப் பண்டைத் தமிழ்ப் புலவர் நன்கறிந்திருந்தனர். பேராசிரியர் கே.கே

பிள்ளை அவர்கள் இக்கருத்தினை உறுதிபடுத்துகின்றார். அவர் கூற்றுப்படி. "சங்க காலத் தமிழர் இந்தியாவின் இயற்கையமைப்பு பற்றி சிறிதளவு அறிந்திருந்தனர் புறநானூற்றுத் தொகுப்பில் வரும் பெரும்பான்மைப் புலவர்கள் இந்நாட்டின முழு எல்லைகளை நன்கறிந்திருந்தனர்' என்பதாம்.

வடநாட்டார் இத் துணைக் கண்டத்தை 'பரதகண்டம்' என்று அழைத்தனர். தமிழர் இக்கண்டத்தை 'நாவலந்தீவு', 'நாவலக் பெருந்தீவு', 'சம்புத்தீபம்' என்ற பெயர்களால் அழைத்தனர் மாமன்ன னாகிய பரதன் ஆண் நாடு; சிவபெருமானுக்கு விருப்பம் தரும் நாவல் மரங்கள் செறிந்த கண்டம் என்பது மேற்கூறிய கூற்றுக்களின் உட்பொருள், மணிமேகலையின் பதிகப்பாடல் இந்நாட்டை "பாடல் சால் சிறப்பின் பரதத் தோங்கிய" என்று சிறப்பித்துக் கூறுகின்றது.

பாடுதற்குரிய இத்துணைக் கண்டத்தை தென், குண, குடக் கடல்களும், இமய மலையும் காத்து நிற்கின்றன. இதனைப் பின் வரும் இரண்டு புறநானூற்றுப் பாடல்களும், ஒரு மதுரைக் காஞ்சிப் பாடலும் நன்கு விளக்குகின்றன.

"வரை அது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅ துருகெழு குமரியின் தெற்கும்
குணா அது கரைபொரு தொடு கடற்குணக்கும்
குடா அது தொன்று முதிர் பௌவத்தின் குடக்கும்"

"தென் குமரி வட பெருங்கல்
குண குட கடலாவெல்லை
குன்று மலை காடு நா
டொன்று பட்டு வழிமொழியக்"

"தென் குமரி வடபெருங்கல்
குண குட வெல்லைத்
தொன்று மொழிந்து தொழில் கேட்ப"

இப்பாடல்களில் வரும் 'பனிபடு நெடுவரை' 'வடபெருங்கல், ஆகிய சொற்கள் இமய மலையைக் குறிக்கின்றன. இம் மலை இந்தியாவின் வடபுலக் காப்டரண், இந்தியாவின் வட எல்லை என்பதை

யும் தமிழ்ப் புலவர் அறிந்திருந்தனர். இக் கருத்தை வலியுறுத்தும் பாடல்கள் பின்வருமாறு :

''கடவுள் நிலைய கல்லோங்கு நெடுவரை
வடதிசை எல்லை இமய மாகத்''

வடதிசை மருங்கின் வானவன் பெயாரது ''

கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் புகழுமிடத்து, பரணர் கற்களாலே உயர்ந்து நெடுவரைகளைக் கொண்டதும், கடவுளர் தங்கும் நிலைகளை உடையது மாகிய இமயமலை அவனது பரந்த பேரரசின் வட எல்லையாயிற்று என்பர். அது போன்று சிலப்பதிகார, ஆசிரியர் சேரன் செங்குட்டுவனைப் புகழும்போது இமயமலையை இந்தியாவின் வடதிசை மருங்கு (எல்லை) என்று வருணித்தார். சங்க கால இந்தியாவின் வடக்கு எல்லை இமயமைலை என்பது இவற்றின்மூலம் பெறப்படும் வடக்கே இமயமலையையும், தெற்கே குமரிக் கடலையும், கிழக்கே வங்கக் கடலையும், மேற்கே அரபிக் கடலையும் இயற்கை எல்லைகளாகக் கொண்டிருந்தது இந்தியா என்ற நிலவியல் அமைப்பை நாம் இலக்கியங்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

இம்மலையினை சங்கப் புலவர் 'வடபெருங்கல்; தொன்று முதிர் வடவரை', என்றொல்லாம் பெருமிதத்துடன் குறிப்பிடுகின்றார். இச் சொற்கள் பயன்படுத்தப்படும் பொருளையும் இடத்தையும் கூர்ந்து நோக்கின் இமயமலையைச் சுட்டுவதைக்காணலாம், வடமலை, வடவரை என்ற இச் சொற்களின் பயன்படுத்தப்பட்ட இடத்தையும், பொருளையும் நோக்குமிடத்தும் இது தெளிவு. இச்சொற்கள் வேங்கடமலையைக் குறிப், பிடுமோ என்ற ஐயத்திற்கும் இடம் உள்ளது, இதனை மனத்திற் கொண்டு பேராசிரியர் கே. கே. பிள்ளை அவர்கள் அச் சொற்களின் பயன்பாட்டையும், இடச்சுட்டையும் ஆய்ந்து 'வடமலை' என்ற சொல் வேங்கட மலையைக் குறிப்பதாகவேயுள்ளது என்கிறார். அவர் கூற்றுப்படி அது இமயமலையையோ அல்லது திருப்பதியின் வேங்கட மலையையோ குறிப்பதாக இருக்கலாம். நச்சினார்க்கினியார் உள்ளிட்ட சில உரையாசிரியர்கள் ,'வடமலையை இமயமலையாகவே கொண்டுள்ளனர். ஆனால் அது தமிழகத்துக்குச் சற்று வடக்கில் உள்ள வேங்கடமலையைக் குறிக்கிறது என்பது பெருமளவு பொருத்த முடையதாகத் தோன்றுகிறது''.

'வடகலை', 'வடவரை' என்ற சொற்களை மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் இரண்டு சொற்களுக்குமிடையே அதிக வேறுபாடு இல்லாதிருப்பதைக் காணலாம். ஒரு வேளை இரு சொற்களும் ஒரே பொருளைக் குறிப்பனவாகவும் இருக்கலாம். ஆனால் இச் சொற்கள் பயன்படுத்தப்பட்ட இடங்களைச் சற்று நுணுகி ஆராய்ந்தால் வேறுபாடு அதிகம் இல்லாதிருப்பது புலனாகும். பயன்பாட்டு இட வேறுபாட்டு இருந்தும் இச்சொற்கள் ஒரே ஒரு மலயைக் குறிப்பது விளங்கும். 'வடமலை' என்ற சொல்லைப் பிசிர் ஆந்தையார் பயன்படுத்துமிடத்து அது வேங்கடமலையைக் குறிப்பதில்லை. அது போன்று பரணர் 'வடவரை' என்ற சொல்லைப் பிறிதோரிடத்தில் பயன்படுத்துமிடத்து அது இமயமலையைக் குறித்தது. பிசிர் ஆந்தையர் பாடிய பாடல் வருமாறு.

''அன்னச் சேவல் அன்னச் சேவல்
ஆடு கொள்வென்றி அடுபோரண்ணல்
கோடுகூடு மதிய முகிழ்நிலா விளங்கும்
மையல் மாலையாங் கையறு பினையக்
குமரியம் பொருந்துறை அயிரை மாந்தி
வடமலைப் பெயர்குவை யாயின் இடையது
சோழ நன் நாட்டுப் படினே கோழி
... ...''

இப்புலவர் பெருமகனார் சோழரின் கோழி எனும் உறையூர் தென் குமரிக்கும் வடமலைக்கும் இடையே அமைந்திருக்கிறது என்றார். அதாவது அது இமயமலைக்கும் தென்குமரிக்கும் இடைப்பட்டது புலனாகும். ''வடவரையை' இமயமலையாகக் கொண்டு பரணர்பாடிய பாடலும் வருமாறு :

''தொடுத்தேன் மகிழ்ந செல்லல் கொடித்தேர்ப்
ஆரிய ரலறத் தாக்கிப் பேரிசைத்
தொன்று முதிர் வடவரை வணங்குவிற் பொறித்து
வெஞ்சின வேந்தரைப் பணிந்தோன்
வஞ்சி யன்னவென் நலந்தந்து சென்மே

'ஆரிய மன்னர்களைத் தாக்கி, அவர்களை வெற்றி கொண்டபின் தொன்மையும் முதிர்ச்சியுமுடைய வடவரையாகிய இமயமலையில் வில் பொறித்த சேர மன்னனே என்று புகழ்ந்து கூறுகிறார்.

பட்டினப்பாலையைப் பாடிய உருத்திரங்கண்ணனார் 'வட-மலையை' இமயமலையாகக் கொண்டு பாடிய பாடலும் நமக்கு கிடைத்துள்ளது. பட்டினப் பாலையின் அவ்வரிகள் பின்வருமாறு:

"... ... ...
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த வாரமு மகிலும்
தென்கடல் முத்துங் குணகடற் றுகிரும்
கங்கை வாரியுங் காவிரிப் பயனும்
... ... "

'வடமலை' யாகிய இமயமலையில் பிறப்பன மணியும் பொன்னும் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது, மேலும் இம்மலையை 'வடபாற் செம்பொன்மலை' என்றும் புகழ்ந்து பாடியுள்ளனர். பெரும்பாணாற்றுப்படையில் வரும் கடியலூர் உருத்திரங்கண்ணனாரின் அப்பகுதி பின் வருமாறு:

"... ... ...
குடகாற் றெறிந்த குப்பை வடபாற்

செம் பொன் மலையிற் சிறப்பத் தோன்றும் "

சிலப்பதிகார ஆசிரியரும் இமயமலைக்கு 'வடமலை' என்ற பெயரையே சூட்டியுள்ளார், அப்பாட்டுப் பகுதியாவது:

"குடதிசை மருங்கின் வெள்ளயிர் தன்னொடு
குடதிசை மருங்கிற் காரகில் துறந்து
வடமலைப் பிறந்த வான்கேழ் வட்டத்துத்
தென்மலைப் பிறந்த சந்தன மறுகத்" ...

அழகுகெழுமிய சிலா வட்டம் பிறந்தது வடமலையாகிய இமய-மலையிலாகும் என்பது அக்குறிப்பட்ட அடியின் பொருள் ஆகும். இதுபோன்று 'வடவரை' என்று இமயமலையைக் குறிக்கும் பாடற்

பகுதி அகனூற்றுப் பாடல்களிலும் வருகின்றன. அப்பாடற் பகுதியாவது,

'வடவரை தந்த வான்கேழ் வட்டம்'' ஆகும். நெடுநல்வாடையிலும் இச் சொற்கள் இமயமலையைக் குறிப்பனவாகவே வருகின்றன. மேற்கூறிய பாடற்பகுதிகளின் பயன்பாடு, இடச்சுட்டு, பொருள் ஆகியவற்றைக் கொண்டு 'வடமலை', 'வடவரை' என்ற சொற்களை ஆராயுங்கால் அவை இமயமலையை அன்றி வேங்கட மலையைக் குறிக்காதது காண்க. ஆகவே நச்சினார்க்கினியர் போன்ற உரையாசிரியர் 'வடமலைக்கு' இமயமலை என்று கூறிய பொருள் பொருந்துவதும் காண்க.

ஆனால் சில சங்க இலக்கியங்கள் தமிழகத்தின் வடவெல்லையாக இமயமலையைக் குறிப்பிடுவது பெரும் பாலும் பொருந்துவதில்லை எடுத்துக் காட்டாக, பதிற்றுப்பத்து பாடல் ஒன்று மேற்கூறியவாறு தமிழகத்தின் வடவெல்லை இமயமலை என்று அறிவிக்கின்றது. அப்பாடற்பகுதியாவது;

''ஆரியர் துவன்றிய பேரிசை யிமயம்
தென்னங் குமரியொ டாயிடை
மன்மீக் கூறுநர் மறந்தபக் கடந்தே''.

தமிழகத்தின் வட எல்லையாக இமயமலையைக் கூறுதல் பொருத்தமற்றது என்று பேரரசிரியர் கே. கே. பிள்ளை அவர்கள் கருதுகின்றார்கள்.

''இமயமலையைத் தமிழகத்தின் வடவெல்லையாகக் கொண்டு சில சங்க இலக்கியங்கள் தரும் விளக்கம் மிகைபடு கூற்று ஆகும்'' என்று அவர் கூறினார். தொல்காப்பியப் பாயிரவுரை வரைந்த பனம் பாரனாருக்குப் பின்வந்த சங்கப் புலவர் அனைவருக்கும் தமிழகத்தின் வடஎல்லை வேகசுடமலை என்று தெரியும். இதற்குக் காரணம் புலவர்களின் சற்பனைத் திறன் ஆகும். தமிழகத்தின் நான்கு இயற்கை எல்லைகளை நன்குணர்ந்த புலவர் தமிழ்ப் பேரரசர்களின புகழ் இமயம் வரை பரவியிருந்தது என்று கூறுதற் பொருட்டே இப்படிக் கூறிவிட்டனர் போலும். தமிழ் மாமன்னர்களின் பேராதிக்கத்தை வடநாட்டரசர்கள் மதித்து நடந்த காரணத்தால், அவர்களது

புகழின் வட வெல்லையாக இமயம் திகழ்ந்தது என்பது பொருந்தும். 'இமயவரம்பன்' என்ற சிறப்புப் பெயர் இதனை நன்கு விளக்குகின்றதன்றோ!

இது காறும் நாம் இமயமலை இந்தியாவின் வட எல்லை என்பது பற்றி சங்க நூற்கள் வழி நின்று கண்டோம். இனி நாம் அந்நூற்கள் வழி நின்று அம்மலையின் சிறப்பு இயல்புகளையும், தன்மைகளையும் சற்று ஆய்வோம். இம்மலை உயர்ந்த சிகரங்களைக் கொண்டிருந்ததால் அதனைப் புலவர் 'கல்லோங்கு நெடுவரை என்று புகழ்ந்தனர் நீண்ட மலைத் தொடராகையால் அதனை 'நெடுவரை', 'நிலனு நீடிய இமயம்' என்றனர். உலகத்து மலைகளுக்கெல்லாம் பெரிய மலையாகிய காரணத்தால் அதனைப் "பெருவரை" என்றனர். பருமனுகிய மலை என்பதனைப் 'பருவரை' என்ற சொல் கொண்டு விளக்கினர். இது நிலையான தன்மையுடையது என்று 'பொற் கோட்டிமயமும் பொதியமும் போன்றே' என்று முடியும் புறநானூற்றுப் பாடலும், அசைவற்ற தன்மையுடையது என்று சிலப்பதிகாரமும் விளக்குகின்றன. இதன் உயர்ந்த, உன்னதமான சிகரங்கள் என்றும் எப்போதும் பனியால் மூடப்பட்டிருக்கும். எனவே அதனை 'பனிபடு நெடுவரை' என்றனர். பனியால் மூடப்பட்டிருப்பதால் அது பொன் வேயப்பட்டது போன்றும், நிறமற்ற வெள்ளிமுலாம் பூசப்பட்டது போன்றும் காட்சி தரும். ஆகவே புலவர்கள் அதனை 'பொற்கோட்டிமயம்' என்றும், 'பொன்படு நெடுகோட்டிமயம், என்றும், 'செம்பொன் நெடுவரை' என்றும் 'வெள்ளி மால்வரை' என்றும் வருணித்தனர். சூரியக் கதிர்வீச்சின் காரணத்தால், பனியால் மூடப்பட்டிருக்கும் பகுதிகள் தூரத்திலிருந்து பார்ப்போர் கண்களுக்கு அவ்வாறு தென்படுதல் இயற்கை. இக்காட்சிக்குக் காரணங்கள் தூரம், சூரிய ஒளி, பனி ஆகியவையாம். இதனை புலவரின் வெறும் கற்பனைப் படம் பிடிப்பு என்பதனைக் காட்டிலும், உண்மைத் தோற்றத்தின் விளக்கம் என்று கொள்ளுதல் சிறந்தது.

புலவரின் கற்பனைத் திறத்திற்குச் சிறந்த ஓர் எடுத்துக் காட்டுள்ளது. அது யாப்பருங்கலக் காரிகையில் வருகின்றது அப் பாடல் பின் வருமாறு;

"சுருக்கமில் கேள்வித் துகடீர் புலவர் முன் யான் மொழிந்த
பருப்பொரு டானும் விழுப்பொரு ளாம் பனி மாலிமயும்

பொருபகஞ் சேர்ந்த பொல் லாக்கருங் காக்கையும் பொன்
னிறமாய்
இருக்குமென் றிவ்வா றுரைக்குமன் ரேவிவ் விருநிலமே.''

இமய மலைக்குச் சென்று வந்த பொல்லாக் கருங்காக்கையும் பொன் நிறமாகும் என்பது இப்பாடலின் பொருள். பிற்கால நூற்களுள் ஒன்றாகிய பெருங்கதை இமயமலையின்கண் பொன்னும், வைரமும், வெள்ளியும் விளைவதாய்க் கூறுகின்றது. பட்டினப்பாலை என்ற சங்க இலக்கியம் பொன்னும், காரியமும் வடமலையாகிய இமய மலையிலிருந்து வருவதாகக் கூறுகின்றது. புலவர்களின் கற்பனைத் திறன் ஈண்டு மிகைபட்ட கூற்ருக இருந்தாலும், அவர்கள் குறிப்பிடும் விலையுயர்ப் பண்டங்கள் அங்கு இல்லை என்று திட்டவட்டமாகக் கூற விட இயலவில்லை.

இம் மலைப் புறங்களில் உயர்ந்து வளரும் மூங்கில் கொடிகள் பெருமளவில் வளர்ந்திருந்தன அதனைப் புறநானூற்றுப் பாடல் ஒன்று 'கழை வளரிமயம் போல, என்று கூறி, அப்பாடலின் தலை. மகனும் அவ்வாறு வானுயர வளர்வான் என்று போற்றிற்று- கலித்தொகை இம் மூங்கில் கழைகளை 'இமயவில்' என்றது. பள்ளத் தாக்குகளில் சிற்றருவிகளும், நீரூற்றுக்களும், நீலநிறப் பைஞ்சுனை' களும் பாய்ந்தோடின, இதனை 'குவளைப் பைஞ்சுனை' என்று புற- நானூறும், 'பரத்திலங்கருவியொடு' என்று பதிற்றுப்பத்தும், 'நிவந்- தோங்கிமயத்து நீலப் பெருஞ்சுனைப்' என்று பரிபாடலும், 'கெண்டை- பாயச்சுனை நீல மொட்டலருங் கேதாரமே' ''என்று சம்பந்தர் தேவாரமும் பாடிப் புகழ்ந்தன. இப் பைஞ்சுனைகளில் 'நீலோற்பலம்' 'குவளை' போன்ற பூச் செடிகள் படர்ந்து வளர்ந்திருந்திருந்தன. எனவே இவற்றைக் கொண்ட இப் பைஞ்சுனைகள் நீலநிறமாகத் தோற்றமளித்தன. இச் சுனைக் கண் ஊறும் நீரை மான், யானை சிங்கம் போன்ற விலங்குகள் பருகித் தம் தாகத்தைத் தீர்த்துக்- கொண்டன. பதிற்றுப்பத்து இம்மான்களைக் 'கவரி' என்ற பெயரால் சுட்டிய போது, கலித்தொகை 'மடநடைமானினம்' என்று கூறிற்று. இம் மடநடை மான்களும். கவரிகளும் இம்மலைப் புறத்து வளர்ந் திருந்த நரந்தம் புல்லைத் தின்று மகிழ்ந்தன. மேலும் இம் மலை யின் கண் வானோங்கு வளம் தசர, வேங்கை மரங்களும் வளர்ந்- திருந்தன. நரந்தம் புல்லைத் தின்ற மானினங்கள் இரண்டிரண்டாக

இம்மரங்கள் தரும் நிழலில் தங்கி ஓய்வெடுத்துக் கொண்டன இம் மரங்களில் தேனகூடுகள் தொங்கின. அவற்றிலிருந்து தேன் துளிகள். தரையில் வீழ்ந்த வண்ணமிருந்தன.

இம்மலையில் வற்றா வளம் கொழிக்தும் வான்மழைக்குக் குறைவேயில்லை பெருமளவு நீரைப் பொழியும் கமஞ்சூல் (முற்றிய) மாமழை இடி, மின்னல், காற்றுடன் பொழிந்திறங்கின இங்கு இடி, மின்னல். காற்று, மழை ஒதுங்கிடம் தேடி அலைந்த பாம்பையும் தாக்குமளவு சக்தி வாய்ந்தனவாக விருந்தன அவ்வழகிய காட்சியைக் குறுந்தொகைப் பாட்டொன்று சித்தரிக்கின்றது.

'நெடுவரை மருங்கிற் பாம்பு பட இடிக்கும்
கடு விசை உருமின் கழறுகுரல் அனைஇக்
காலொடு வந்த கமஞ்சூல் மாமழை
ஆரனி யிலையோ நீயே பேரிசை
இமயமும் துளக்கும் பண்பினை
துணையிலர் அளியர் பெண்டிர் இஃதேவனோ?

மழை அதிகம் பெய்வதனால் இயற்கைச் செழிப்பும். அழகும், அமைதியும் இம்மலைப் பகுதிகளில் இருக்கக் காண்கிறோம்.

இவ்வெள்ளிப் பனிமலையின் அடிவாரத்திலிருந்து 'கடல்-போன்ற புண்ணியப் பேராறாகிய கங்கை புறப்படுகிறது. ஆனால் சங்க நூற்கள் சிந்து, பிரம்மபுத்திரா நதிகளையும் அவற்றின் கால்-களையும் குறிப்பிடவில்லை. காலத்தால் பிந்திய பெருங்கதை சிந்து நதியை வடநாட்டுப் பேராறுகளுடன் வைத்தெண்ணுகிறது. இக்கங்கை வற்றா வளம் கொழிக்கும் பேராறு; பேரொளியுடன் வரைகளில் பாய்ந்து செல்கின்றது. 'இன்னிசை முரசிற் பொருப்பன் மன்னி, அமை வர லருவி பார்க்கும்' என்று கலித் தொகை சிறப்பித்துப் பாடிற்று. கெண்டை மீன்கள் துள்ளி யாடின. பேராற்று நீர் ஒலி. பூக்களின் அசைவினால் ஏற்படும் ஒலி, ஆற்றங்கரையிலே தவம் புரியும் மாமுனிவர் எழுப்பும் மந்திர ஒலி, மரங்களின் அசை வினால் ஏற்படும் ஒலி அனைத்தும் ஒருங்கிணைந்து இனிய 'இச்-என்ற ஒலியை எழுப்பின. இவ்வானந்தத்தில் மூழ்கிய வெள்ளை மயில் தோகை விரித்தாடிற்று.

சங்க கரலத் தமிழ்ப் புவலரின் இயற்கை வருணனை முழுதும் உன்மை என்று கொள்வதற்கில்லை; அவை அனைத்தும் கற்பனை என்று தள்ளுவதற்குமில்லை. அன்று அவர்கள் சுட்டிய பல மரஞ் செடி கொடிகள், மிருகங்கள் காலத்தின் விளையாட்டால் அழிந்து போயிருக்கலாம். மிஞ்சியவற்றில் யானை, சிங்கம் தவிர மற்ற விலங்குகள் இன்னும் அங்கு வாழ்வதை நாம் காணலாம். இவ்வளவும் கூறிய அவர்கள் என் பறவைகளைப் பற்றி ஏதும் கூறவில்லை? ஒரு வேளை பறவைகள் அவர்கள் கண்ணுக்குத்தப்படாமலும் அவற்றின் இசை காதுக்கு எட்டாமலும் இருந்து விட்டனவோ! இமயமலைப் பகுதியிலும் பறவைகள் வாழ்கின்றன என்பதனை அப்பகுதிக்குச் செல்வோர் அறிவர் அன்னப்பறவை, காக்கை, நாரை போன்ற பறவைகளைப் பயன்படுத்தி தூது அனுப்பிய புலவர்களின் பாடல்கள் மூலம் பறவைகள் இடப் பெயர்ச்சி செய்கின்றன என்பது விளங்கும். அவர்கள் தரும் இக் காட்சிகளில் சில அவர்களின் கற்பனையின் விளைவே. கற்பனையை ஒதுக்கி விட்டு மீதத்தைக் கூர்ந்து நோக்கின் உண்மை விளங்கும்,

(தொடரும்)

வள்ளுவரும் குறளும்

திருவள்ளுவர் :

இதுவே இந்நூலாசிரியர் பெயர்கள் அனைத்திலும் பெருவழக்கிற்றுதலானும், சிறுபான்மை வழங்கும் ஏனைய பெயர்கள் போலாது இஃது, ஆகு பெயரால் இவரால் இயற்றப்பட்ட நூற்கே சென்று வழங்குஞ் சிறப்பிற்றுதலானும் இதனையே முதற்கண் நிறுத்து விளக்கப் புகுந்தோம். ஆகுபெயராய்க்கொண்டு ''வள்ளுவர் தொல்காப்பியமே' எனக் கொற்றங்குடியாரும், ''தொல்காப்பியந் திருவள்ளுவர்'' என இலக்கணக்கொத்துடையாரும் வழங்கினர்.

இனி, இப்பெயர்ப்பொருள் வருமாறு : திரு என்பது ஈண்டு அறிவுடையாரான் விரும்பப்படுந் தன்மை. ''திருவளர் தாமரை'' என்புழித் ''திரு-கண்டாரான் விரும்பப்படுந் தன்மையெனப் பொருள் தருதலான் ஈண்டைக்கேற்ப அறிவுடையார் எனக் கூறப்பட்டது.

வள்ளுவர் என்பது சாதிபற்றிய இயற்பெயர். எங்ஙனஞ் சாதி பற்றியவாறெனிற், கூறுதும்; இவர் கீழ்க்குடிப்பிறந்தார் என்பது ''மொய்த்த திருவள்ளுவனர்வென்றுயர்ந்தார் கல்விநலத் துய்த்த சங்கத்தார் தாழ்ந்தார் சோமேசா-வுய்த்தறியின், மேற்பிறந்தாராயினுங் கல்லாதார் கீழ்பிறந்துங், கற்றாரனைத்திலர் பாடு'' என்னும் முதுமொழிவெண்பாவினுல் நன்குணரற்பாற்று. ''தேவைமறந்தேயும். வள்ளுவனென்பானோர் பேதையவன் வாய்ச் சொற், கொள்ளா ரறிவுடையார்' (திருவள்ளுவமாலை) என் புழி மக்களிற் சிறந்தான் ஒருவனை வள்ளுவன் என்னுங் சாதிபற்றி இழித்தல் அறிவிலாரது இயல்பு எனப் பொருள்தந்து நிற்றலான், அக்குடி வள்ளுவக்குடி என்பது தெள்ளியது. வள்ளுவராவர் யானை மேல் முரசுகடிப்பிட்டு அரசாணை சாற்றுவர் ''ஏமாறு மன்னீரெயிறினுமிங்கோமான், வாமான் றேர்க்கோதை சதயநா·ளாமாறு, காமநுகருமின் கண்படுமினென்னுப யேம முரசின் குரல்''. இதனுள் இழிகுலத்தோன் பறை சாற்றினமை கூறுதலின்'' (தொல், பொரு, புற, நம) என நச்சினார்க்கினியர் உரைத்தவாற்றுன் முரசறைவார் இழிகுலத்தோர தல் தெளிக. இவ்வாறு ஓர்குடி பண்டு உண்மையினையும், இக்குடிப்பிறந்தோன் ....யணி ழாவறைந்தனன்'' என்னும் மணிமேகலை துறவானும், (விழாவறை காதை)

''வானவன் குலத்தெமர் வரத்தினுல் வரும்
வேனில்வே ளிருந்தவம் மிதிலி நோக்கிநஞ்
சேனையு மரசருஞ் செல்கு முந்தெனு
வான்மேன் மணமுர சறைகென் றேவினுன்!'

''வாம்பரி விரிதிரைக் கடலை வள்ளுவன்
றேம்பொழி துழாய்முடிச் செங்கண் மாலவ
ணம்பரி சுலகெலா மளந்து கொண்டநாட்
சம்புவன் றிரிந்தெனத் திரிந்து சாற்றினன்''

எனவரும் கம்பராமாயணச் செய்யுட்களானும் உணர்ந்து கொள்க. இத்துணையுங் கூறியவாற்ருல் வள்ளுவர் என்பது சாதி பற்றிய பெயராதல் தெளிக.

இனி இஃது இயற்பெயராமாறு—''சிறப்பினுகிய பெயர்நிலைக் கிளவிக்கு, மியற்பெயர்க்கிளவி முற்படக் கிளவார்'' என்னுத் தொல்காப்பியச் சூத்திரவுரையில் (கிள, 41) சேனுவரையரும், நச்சினுர்க்கினியரும் ''தெய்வப்புலவன் திருவள்ளுவன்'' என உதாரணம் எடுத்தோதினமையான் நன்கு உணரப்படும். கீழ்க்குடிப் பிறந்து பெருநூல் செய்தாரை அக்குடிப் பெயரான் வழங்குதல் உலகவழக்காதலான், இவர்க்கும் அக்குடிப்பெயரே வழங்கலாயிற்று. இவ்வாறு குடிப்பெயரே நூலாசிரியர் வழங்குவது வடநூலார்க்கும் உடம்பாடென்பது, அவர், 'வியாதகீதை' என வழங்குமாற்ருன் நன்கு தெளிக, வியாதன்—வேடன். இனித் திருவென்பது உயர்வையும் வள்ளுவரென்பது வண்மையுடையாரையும் விளக்கி நின்றன என்பாரும் உளர்.

இப்பெயர் வழக்கினைத் திருவள்ளுவமாலையுள்ளும், ஆசிரியர் பரிமேலழகர் உரைப்பாயிரத்துள்ளுங் காண்க. உஃது சிறுபான்மை திருவெனினும் அடை ஒழித்து வள்ளுவன், வள்ளுவர், வள்ளுவனர் எனவும் வழங்கப்படும்.

தேவர்.

இப்பெயர், திருத்தகுதேவர், தோலாமொழித்தேவர், என அடைபுணர்த்து வழங்கும் பெயர்கள் போலாது இவர்க்குத் தனிநின்று வழங்கும் சிறப்பிற்ருகலானும், திருத்தக்கதேவரைத் தேவர் என

ஆசிரியர் நச்சினார்க்கினியர் வழங்குவது அவரியாற்றிய சிந்தாமணி-யின்கண்ணன்றி வேறிடத்தின்மையானும், அவ்வுரையாளரே சிந்தாமணியுள் அந்நூற்சம்பந்தம் பெறாத திருவள்ளுவரைத் தேவரென வழங்குதலானும் (விமலையாரிலம்பகம் 3) இத்திருப்பெயரை அடுத்து நிறுத்து விளக்கப்புகுந்தோம்.

இல்லறத்தோடு கூடி வாழும் இயல்பினால் வையத்தின்கண் வாழ்ந்தவருள் ஒருவராதலால், இவரை வானின்கண் உறையுந் தேவருள் ஒருவராக வைத்து அறிவாளர் நன்குமதித்து வழங்கினார் எனக்கொள்க. "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந் தெய்வத்துள் வைக்கப்படும்" (திருக்குறள்,50) என்னுந் திருக்குற ளையும், அதற்குப் பரிமேழகர் எழுதிய உரையையும் நோக்குக.

ஆசிரியர் நச்சினார்க்கினியர் "கழிவினும் வரைவினும்" (தொல்பொரு கற், 12) என்னுஞ் சூத்திரவுரையிற் றலைவன் மனையறங் கண்டு கூறியதற்கு எடுத்தோதிய "அடிசிற்கினியாளே" என்னுஞ்-செய்யுள் தெய்வப்புலமைத் திருவள்ளுவனாரது என்பது உலகத்துப் பெருவழக்காதலானும், இல்லாளோடு கூடி வாழ்தலினது சிறப்பை மேப்படுத்துரைத்தாராகலானும், அகலிகை தோள்விடாக்கௌதமனை ஐந்தவித்தானாகக் கருதினாராகலானும் (திருக்குறள்—25) இவ்வாசி ரியர் இல்லறமே இனி தோம்பி மிக்கார் என்பது தெள்ளிது. இவர் இல்லாளோடு கூடிவாழ்ந்தே புலன்களிற் செல்கின்ற அவா ஐந்தனை யும் அறுத்தற்கு உடம்பட்டமை "ஐந்தவித்தானாற்றல்" என்னும் நீத்தார் பெருமைத் திருக்குறளால் நன்று விளங்கும்.

இனி, அறிவான் மக்களின் மேம்பட்டுத் தேவரோடொத்தா-ராகக் கருதித் தேவரென்ப எனினும் அமையும். அறிவு மிகுதி நோக்கித் தேவரைப் புலவரெனப் பெயரிட்டு வழக்குமாற்றானும் ஈது பொருந்துதல் காண்க. மக்கட்பிறப்பினராயினும் அறிவான் இழித்-தாரை விலங்கனையர் என இழித்தும், மிக்காரைத் 'தேவரனையர் என உயர்த்தும் ஆன்றோர் கூறுப 'விலங்கன்னார் வெள்ளறிவினார்' என நாலடியிலும், 'தேவரனையர்புலவர் என நான்மணியினும் கூறிய-வாற்றான் இதன் உண்மை உணர்க. இப்பெயர் வழக்கினைத் திரு' வள்ளுவமாலையினுங் காணலாம். மேற்கூறிய பெயரினையும் இப்-பெயரினையும் புணர்த்துத் 'திருவள்ளுவதேவர்' எனவும் வழங்குப-(நேமிநாதவிருத்தி, சொல்)

தெய்வப்புலவர்

இவர், வேதம் ஓதாக்கீழ்க் குடிப்பிறந்தும் அதன் கண்நுண் பொருண் முற்றவுணர்ந்து உரைக்கவல்லராதலால், தெய்வத்தான் எய்திய புலமையுடையார் என்பது இனி, நாமகளும், இறையனாரும் பாயிரம் ஓதினமையாற் றெய்வத்தாற் சிறப்பித் தோதப்பட்ட புலமையினர் எனவும், "தந்தானுலகிற்குத் தான்வள்ளுவனாகி, யந்தாமரைமேலயன்" "நான்முகத்தோன் றான்வள்ளுவனாகித் தந்துரைத்த' என்பனவற்றால் இருபெயரொட்டாககித் தெய்வமாகிய புலவர் எனவும், நீதிநூல் ஒதுதலாற் றெய்வப்புலவனை வியாழனையொத்தார் எனவும் உரைப்பினும் அமையும். இப்பெயர் வழக்கம் 'சிறப்பினாகிய தொல், சொல் கிள, 41) என்னுஞ் சூத்திரத்துச் சேனாவரையருரை -யினும், நச்சினார்க்கினியர் உரையினுங் கண்டது.

பொய்யில் புலவர்

இப்பெயர்ப், பொய்ம்மையில்லாத அறிவர் என்னும் பொருட்டு தன்கண்' மயக்கமின்மையிற் பொருள்களை உள்ளவாறுணரவும் உணர்ந்தவாறு உரைக்கவும் வல்லரென்பதாம். பிறரும் உள்ள-வாறுணர்ந்துரைத்தமை கருதி 'நான்கின்றிறந்தெரிந்து செப்பிய-தேவை' என்றார், (திருவள்ளுவமாலை பொய் உனர்வினும் உரையினும் உண்டாதலான் இரு கூறாக்கி உரைக்கப்பட்டது. இதற்கு இயைய, வாலறிவின் வள்ளுவர்' எனவும், 'வாய்மொழி வள்ளுவர்' எனவும் இருபாற் படுத்துரைத்தார் திருவள்ளுவமாலையினும். 'வாலறிவும் என்பது மெய்யுணர்வாதலை 'வாலறிவன்' (திருக்குறள் 2) என்புழிப்' பரிமேலழகர் உரைத்தவாற்றானுற்றேறுக.

"பொய்யாமை பொய்யாமை யாற்றி னம்பிற, செய்யாமை செய்யாமை நன்று" (திருக்குறள், 297) பொய்யாமையன்ன புகழில்லை' (திருக்குறள் 296) 'வாய்மை மொழி தெரியின் தவத்தொடு தானஞ் செய்வாரிற்றலை' (திருக்குறள் 295) எனப் பொய்யாமைச் சிறப்பினைத் துறவறவியலுள் வைத்து வற்புறுத்துரைத்ததின்றி, இறுதியில் 'யாமெய்யாக் கண்டவற்றுளில்லை யெனைத் தொன்றும் வாய்மையினல்ல பிற" (திருக்குறள் 30) எனத் தம்மேல் வைத்துத் தாமே கரி கூறிப்போந்தராகலான். இவர் பொய்யாவொழுக்கின ரென்பது தெள்ளிது; எனவே இவ்வியையு பற்றியும் ஈண்டும் பொய்யின்மை விசேடமாயதெனக் கொண்டு உணர்வு உரை

ஒழுக்கங்களாற் பொய்மையில்லானினும் நன்கு அமையும். பொய் ஒழுக்கத்தினும் உண்டென்பதனைப் ''பொய்தீர் ஒழுக்கம்' (திருக்'6) என்பதனுன் உணர்க. நச்சினார்க்கினியர், புலவுத்துறந்த நோன்புடை-ராகலாற் பொய்கூருர். (தொல், பொரு, மரபி 94) எனப் பொய்கூரு-மைக்குப் புலவுத்துறந்த நோன்புடைமையினை ஏது கூறினர்; ''ஒன்ருக நல்லது கொல்லாமை மற்றதன், பின்சாரப் பொய்யாமை நன்று'' (திருக்குறள்-323) என்பதன்கண்ணும் இக்கருத்துப் புலப்படுத்தி இவ்-விருபேரறமும் இணைந்து நின்றவாறு உய்த்துணர்ந்து கொள்க. இனித் தேவரும் அன்நோன்பு உடையாரென்பது புலான்மறுத்தல் உரைத்தமையான் உணரப்படும் 'ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப், பேதையிற் பேதையாரில்'' ''(திருக்குறள், 834) என உரைத்தவாறு ஒழுகாரைப் பெரிதும் இழித்தனராகலான், இவர், மறுத்தவாறு துறந்தாராவர். இதனுலும் இவரது பொய்யாவொழுக்கம் புலன்கொளற்பாற்று. இப்பெயர்வழக்கம் மணிமேகலையிற்கண்டது (சிறை செய்காதை, வரி 61)

முதற்பாவலர்

முதன்மையாகிய பாவலரென்க. ஆசிரியர் தொல்காப்பியனுர் செய்யுளியலில், ''ஆசிரியம் வஞ்சி வெண்பாக்கலியென, நாலியற் றென்'ப பாவகை விரியே'' (தொல், பொரு, செய், 115) என்பத-ஞற் பா இனைத் தென விரித்துரைத்து அதனை அடுத்து ''அந்நிலை மருங்கி னற முதலாகிய மும்முதற் பொருட்டு முரிய வெண்ப'' என்பதனுல் அப்பாவினைப் பொருட்டு உரிய வாற்ருன் வரையறுத்-தோதிய இலக்கணம் பிழைபடாது, பாக்களுள் முதன்மையெய்திய குறள்வெண்பாட்டான் மும்முதற் பொருளையும் முப்பாலாக வைத்து முறை வகுத்து முதற்கண் மொழிந்தார் இவரே என்பது கருத்து. பிறரெல்லாம் மும்முதற் பொருளில் ஒன்றேயுரைத்தும், மூற்றவுரை-யாதுவைத்தும் விரவியுரைத்தும் போயினர் என்க இக் கருத்துப் பற்றியன்றே ஆன்ரேரும் 'முப்பான்மொழிந்த முதற்பாவலர்' என்ருர் திருவள்ளுவ மாலையில், ''தப்பா முதற்பாவாறருமாண்ட பாடலினல் 'என்னுஞ் செய்யுளிற் குறள் வெண்பாட்டினை முதற்பாவென்று வழங்கியவாறு காண்க. பாவலருள் முதன்மை எய்தினர் எனினும் அமையும்.

பெருநாவலர்

பெருமையினையுடைய நாவலர் என்பது, நாவலர்-நாவன்மையினையுடையார். நாவன்மையாவது கேட்டார்ப்பிணித்துக் கோளாதாகும் வேட்பமொழியும் சொல்வன்மையுடைமை. (நாநலமென்னு நலனுடை (திருக்குறள் 641) என்பதனாற் சொல்வன்மையினை நாநலமென்றுர் இவரே. இவர் யாரினுஞ் சிறந்த சொல்வன்மையுடையார் என்பது கருதியே 'நாப்புலமை வள்ளுவனுர் 'எனவும், 'சொல்லுதல் வல்லாரார் வள்ளுவரல்லால்' 'எனவும் சான்றேர் பாயிரம் பாடிய தூஉ மென்க. அன்றியும், ''சொலல்வல்லன் சோர்வில னஞ்சா னவனை, யிகல்வெல்லல் யார்க்குமரிது'' (திருக்குறள் 641) என்று தாம் மொழிந்ததற்கேற்ப இவர்தமது நாவன்மையாற் சங்கத்தாரை வென்று உயர்ந்தார் என்பார். ''மெய்த்த திரு வள்ளுவனுர் வென்றுயர்ந்தார் கல்விநலந், துய்த்தசங்கத்தார் தாழ்ந்தார்'' என்றுர் பிறகும், (சோமேசர் முதுமொழி வெண்பா)

பெருமையாவது செயற்கரிய செய்தலுடைமை; செயற்கரிய செய்வார் பெரியர்' (திருக்குறள், 26) என்றுராகலான், ஈண்டு வேதப் பொருளை விரகாற்றெருகுத்து உலகோர் ஓரத்தமிழால் உரைத்தல் செயற், கரிய செய்தலாம். இக்கருத்தினைப், 'பெறலரிய நாலு மொழிந்த பெருநாவலரே' (திருவள்ளுவமாலை) என்பதனாற் பெறுதற்கரிய நான்கு பொருளையும் பெறுதற்கெளிதாக மொழிசெய்த ''என்று சான்றேர் விசேடித்தவாற்ருனும் உணர்க.

மாதாநுபங்கி

இஃது மாதம், அநுபங்கி என இருமொழி புணர்ந்து மாதாநுபங்கி எனவாயது எனல் வடநூன் முடிபு. மாதம் என்பது செருக்கு; அமரகோசம்) அநு என்பது ஸாதத்யார்த்தத்தில் வந்தது; பங்கி÷ பங்கத்தையுடையான் என்றுஞ் செருக்கொழிதலுடையான் என்பது இப்பெயர்க்குப்பொருளாகக் கொள்க. பெரியராதலாற் பெருஞ்சிறப்பெய்தியஞான்றும் தருக்கின்றியமைந்தொழுகுவார் என்பது கருத்து. பணியுமாமென்றும் பெருமை' என்னுந் திருக்குறளினையும் நோக்குக.

இனி, மாதா, அநுபங்கி எனப்பிரித்து மாதாவை நிகராகக் கொண்டு, நடக்கின்ற ஒழுங்கினன் எனப் பொருள் கூறுவாரும் உளர். இப் பொருட்கு மாத்ரநுங்கி என்னும் பெயர் மாதாநுபங்கி எனச் சிதைந்தது என்பது.

"*பெற்றவரு நாற்குருவும் பேணியொருபொருளை
யுற்றிருக்கா லன்றி யுரைசெய்யார்—பற்றி
யொருபொருளைப் பத்துப் பொருளாகச் செப்பித்
தருகையால் வள்ளுவரே தாய்"

என முன்னை முதுவோரும் சிறப்பித்துக் கூறியுள்ளார். இப்பெயர் வழக்கம்÷

"உப்பக்க நோக்கியு பகேசி தோண் மணந்தா
னுத்தர மாமதுரைக் கச்சென்ப - விப்பக்க
மாதாநு பங்கி மறுவில் புலச்செந்நாப்
போதார் புனற் கூடற்கச்சு

என்னுந் திருவள்ளுவ மாலையுட் கண்டது.

இச்செய்யுளில் 'உபகேசிதோண்மணந்தான்' என்றது கண்ண பிரானை உபகேசம்—மயிராற்பின்னிய; அதனாற் பெயர் சிறந்தார் பின்னைப்பிராட்டி. உபகேசத்தையுடையானை உபகேசி என்பது தமிழ் நூல் முடிபு. குண்டலகேசி, நீலகேசி, பிங்கலகேசி என்றாற் போலக் கொள்க. இதனால் உபகேசியும், பிள்ளையும் ஒருபொருட்பன்மொழி-யாதல் காண்க. இதனைமொழியாக்க மரபில் 'பாலேதிணையே என்னும் வெண்பாவுரையில் இவ்வுப்பக்கநோக்கி என்னுஞ் செய்யுளை எடுத்தோதி, "இதனுள் உபகேசியார் நப்பின்னைப் பிராட்டியார் என நேமிநாத விருத்திகாரர் கூறியவற்றாலும் நன்குணர்க. "ஏர்ப்பின்னை தோண்முன் மணந்தவன்" என்றார் திருச்சிற்றம்பலக் கோவையினும்; "பின்னை தோள் மணந்த பேராயா" என்றார் திருவாய்மொழியிலும் உத்தமாமதுரை கண்ணபிரான் அவதரித்தருளிய வடமதுரை, வட-மதுரைப் பிறந்தாய்! என்ப கண்ணன் கஞ்சனானேர்ந்த துயர்கெடுத்து அவ்வூரைத்தாங்கியமை புராணம் வல்லார் வாய்க் கேட்டுத்தெளிக. உட்பக்கம் என்பது வடக்கண் என்றவாறு; நோக்கி என்னும் எச்சம், என்ப என்னும் வினைகொண்டு முடிந்தது. முன்னுந் திருமாலோடும். அக்கடவுள் செயலோடும் திருவள்ளுவரையும் அவர் செயலையும் உவமித்துக் கூறுதலானும் இதுவே இயைபுடைத்தாமாறு உணரப்படும்

* இவ் வெண்பா இச்சங்கத்திற்குக் கிடைத்த திருவள்ளுவர் உரைப் பிரதியில் உள்ள திருவள்ளுவ மாலையிறுதியில், வெளிவராத வேறு சில பாடல்களுடன் உள்ளது.

இக்கருத்தறியாதவர், உபகேசியை உமாதேவியார் எனவும் உத்தரமாமதுரையை வடதிருவாலவாய் எனவும் உரைத்தார் "கேசிதிருமால்; அது அக்கடவுள் சகக்கிரநாமத்திற் கண்டது; கேசிக்குப்பின்னே பிறந்தவள் உபகேசி என்றுயது உதுபந்திரன் என்பது போல" என்றார். கேசி திருமாற்குப் பெயரன்மையும், அஃது அக்கடவுள் ஆயிரநாமத்தின்மையும் வல்லார் வாய்த்தோறுக. "கேசவ கேசிஹ ஹரி"; என்புழிக் கேசிஹ என்பது கேசி என்னும் அசுரனைக் கொன்றோன் என்னும் பொருட்டு இதனை அந்நாலுரைகளிற் கண்டு கொள்க. கேசி திருமாற்குப் பெயரன்மையானே அது பற்றி வந்தன யாவும் உரையன்மை காண்க

செந்நாப்போதார்

சொல்லின்கட் கோடுதல் இல்லாமையினையுடைய நாவாகிய மலருடையார் என்றவாறு "சொற்கோட்டமில்லது செப்பம்" (திருக்குறள், 116) என்பது பற்றி இவ்வாறு உரைக்கப்பட்டது. இவர்க்குச் சொற்கேட்டமின்மையாவது ஒருபாற் கோடாதமனத்தோடு எப்பாலவர்க்கும் ஒப்ப மெய்ந் நூல்களுள் அறம்பொருளின் பங்கள் கிடந்தவாறு எடுத்துரைத்தல் என்பது. எப்பாலவரு மியைபவே வள்ளுவனார், முப்பான் மொழிந்த மொழி" என்பதனாலும், "பகுத்துண்டு பல்லுயிரோம்புதல்" (திருக்குறள், 322) என்பதன் உரையில் ஆசிரியர் பரிமேழலகர் "எல்லா நூல்களிலும் நல்லெனவெடுத்து எல்லோர்க்கும் பொதுப்படக் கூறுதல் இவர்க்கியல்பு" என கூறியவாற்றானும் உணர்க. கெடுதலில்லாத சொல் எப்பாலவர்க்கும் இனிக்குந்தேனாகலால் அதன் புறப்பிரமாகிய நாவினைப் போதாக்கி வழங்கினர் இவரை நான்முகனார் பிறப்பாகக் கோடலாற் கலைத்தெய்வம் இறைகொள்ளும் இயைபு பற்றி நாவில் மலரென்ப எனினும் அமையும்.

நாயனார்

இது தலைமையுடையார் என்னும் பொருட்டு நாயன்-வடமொழிச்சிதைவு. ஆர் விகுதிபெற்று நின்றது. இவர்க்குத் தலைமை புலைமையான் எய்தியதென்க. 'மன்புலவன் வள்ளுவன்'' என்பதூஉம் இக்கருத்தே பற்றி வந்தது. "கடைநிலத்தோ ராயினுங் கற்றறிந்தோரைந் தலைநிலத்து வைக்கப்படும்" என்பது நாலடி. நாயகன் நாயகியைத் தலைவன், தலைவியென்று வழங்கலானும் இது தலைமையாற் போந்தபெயர் என்பது எளிதின் உணரற்பாற்று இஃது திருவள்ளுவநாயனார் என இயற்பெயரோடு புணர்த்து வழங்கப்படும். இவ்வழக்கம் நன்னூல் விருத்தி முதலியவற்றிற் காணலாம்.

ஈழம் ஈந்த சைவப் பெரியார்

—பழனி அரங்கசாமி
மதுரைப் பல்கலைக் கழகம்

ஈழத்திற்கும் தமிழகத்திற்கும் உள்ள தொடர்பு மிகப் பழைமையானது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் இலக்கியம் இதற்குச் சான்று பகரும் கண்ணகிக்குப் படிமம் செய்வித்து விழா எடுத்த போது கடல் சூழிலங்கைக் கயவாகுவும் பத்தினித் தெய்வத்திற்கு விழா எடுத்தான் என்கிறது சிலப்பதிகார உரைபெறு கட்டுரை. இலங்கையின் வரலாற்று நூலான மகா வம்சம் தமிழகத்து வரலாற்றினை வகுப் பதற்குரிய ஒரு கையேடாக விளங்கி வருகிறது. இந்திய விடுதலைக்குப் பின் தமிழகத்திலோ கூட அரசியல் சட்டபபடி தமிழ் அரியணை ஏறுதற்கு முன் ஈழத்திலே அதற்கு உயரிய இடம் அளிக்கப் பெற்றிருந்தது. சைவமும் தமிழும் தழைத்தினிதோங்கப் பாடுபடுகின்ற பேருணர்வு அங்கே பொது நிறுவனங்களிடமேயன்றி தனிப்பட்டோரிடமும் இருக் கிறது. இலங்கையின் இலக்கியப் பணிகளை நினைக்குந் தொறும் நமது உள்ளத்தில் தோன்றும் பேரறிஞர் பலர்—நவாலியூர் கந்தையா பிள்ளை, சுன்னாகம் குமரசாமிப் பிள்ளை, ஆறுமுக நாவலர், சைவப் பெரியார் சிவபாத சுந்தரம் போன்றோர் இவருள் சைவப்பெரியாரின் வாழ்க்-கையும் தொண்டும் பற்றியதே இச்சிறு கட்டுரை.

சைவப் பெரியார் புலோலியூர் சிவபாத சுந்தரனார் ஆறுமுக நாவலருக்குக் காலத்தால் பிந்தியவர். போர்ச்சுகீசிய ஆங்கிலேய வேற்-றலைகள் அடித்த போதும் சைவப்பயிர் சருகாமல் காப்பாற்றிய பெருமை இருவருக்கும் உண்டு. ஆயினும் அவர்களுக்கிடையில் ஒரு முக்கியமான வேறுபாடும் இருந்தது அந்தணரல்லாதார் எவருக்கும் வேதத்தைத் தொடும உரிமை இல்லையென்று கூறிக் கொண்டு வேதத்தைப் பயிலாதிருந்தவர் நாவலர். ஆயினும் புராணங்களையும், ஸ்மிருதிகளையும் குறைவறக் கற்றறிந்து சமயத் தொண்டு புரிந்தார் நாவலர் பால் மிக்க மதிப்பு உண்டேனும், சிவபாத சுந்தரனுருக்கு. இக்கருத்தில் உடன்பாடில்லை. யசுர் வேதத்து 26—ஆம் பிரிவின் இரண் டாம் பகுதியைச் சுட்டிக்காட்டி எமுதாக் கிளவியினை யாரும் படிக்கலாம் என்ற கருத்தினை வலியுறுத்தி வந்தவர். மற்றபடி தமிழார்வமும் அழுத்தமான சைவப்பற்றும் இருவருக்கும் உண்டு.

சைவப் பெரியார் சிவபாத சுந்தரனார் 1878-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் பதினேழாம் நாள் ஈழத்தில் சீழைப் புலோலியூர் எனுமிடத்தில் பிறந்தார். தந்தை சுப்பிரமணிய பிள்ளை ஒரு ஆசிரியரும் தமிழன்பரும் ஆவர் சிற்றப்பா கணபதிபிள்ளை திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியில் வடமொழிப் பேராசிரியர். பிறிதோர் சிற்றப்பா குமரசாமிப் புலவர். அத்தை பார்ப்பதி அம்மையார் வடமொழியும் தமிழும் கற்றுணர்ந்தவர். அக்காலத்திலேயே இந்த அம்மையார் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டித தேர்வுக்கு மாணவிகளைப் பயிற்றுவிப்பது உண்டு. இப்படி வடமொழியும், தென்தமிழும் மறுவற விளங்கிய குடுப்பத்தில் பிறந்த சிவபாத சுந்தரம் வடமொழியும், தென்தமிழும் மறைகள் நான்கும் பயின்று, ஆங்கில மொழியிலும் புலமை பெற்றுத் திகழ்ந்ததில் வியப்பொன்றுமில்லை.

சைவப் பெரியாரின் இளமைக்கல்வி ஈழத்தில் நிறைவுற்ற பின்னர் திருவனந்தபுரம் மகாராஜாகல்லூரியில் மேலும் தொடர்ந்தது. அங்கு எப், ஏ முடித்து திருச்சி ஜோசப் கல்லூரியில் கணிதபாடத்தில் பி.ஏபட்டம் பெற்றார். யாழ்ப்பாணத்துத்துக்குத் திரும்பியதும், பெட்ரோ என்னும் ஊரில் சிறிய தந்தையாரின் பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்தார். அதனைத் தொடர்ந்து ஓரிரு ஆண்டுகள் திரிகோணமலை செயின்ட் ஜோசப் பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்தார். யாழ்ப்பாணம் விக்டோரியா கல்லூரியில் சிறிது காலம் ஆசிரியராகிப் பின்னர் 1924 முதல் 1933-வரை பணியிலிருந்து ஓய்வு பெறும் வரை—சுழிபுரம் விக்டோரியா கல்லூரியில் தலைமைப் பேராசானகத் திகழ்ந்தார்.

ஆசிரியராகப் பணியாற்றியோருள் பி. ஏ பட்டம் பெற்றவர் இவர் ஒருவரே ஆதலின் இவருக்குப் பி. ஏ. மாஸ்டர் என்ற சிறப்புப் பெயர் நிலவியது. தெளிந்த சிந்தனையும், திறஞ்சான்ற சொல்வளமும் தேர்ந்த மொழியறிவும் கைவரப் பெற்றவராதலின், சிவபாத சுந்தரனார் மிகச் சிறந்த ஆசானகத் திகழ்ந்தார். மாணவர்கட்குப் பாடங்களைப் பயிற்றும் முறை பற்றித் தமிழில் இவர் எழுதிய சிறுநூல் ஒன்று இலங்கை அரசினரால் ஆசிரியப் பயிற்சி மாணவர்கட்கு அக்காலத்தேயே அச்சிட்டு வழங்கப்பட்டது. ஆசிரியராகப் பணியாற்றும் போதே மாணவருக்குக் கொல்லாமை பற்றியும், அறவினை ஆன்மீக உணர்வு குறித்தும் இவர் பயிற்றுவது வழக்கம். இந்த உணர்வு மீதூர்ந்த நிலையில் தான்

யாழ்ப்பானப் பகுதியின் பல்வேறிடங்களில் குறிப்பாக 1920 ஆம் ஆண்டுக்குப் பிறகு சைவப் பாடசாலைகள் பல தோன்றுவதற்கும் சிவபாத சுந்தரனர் காரணமாய் இருந்தார்.

அந்தக் காலத்தில் கிறித்தவர் நடத்தும் பள்ளிகளில் இந்துக் குழந்தைகளைத் திருநீறு அணிய விட மாட்டார்கள். அரசினர் உதவி பெறும் பள்ளிகளாக இருந்தாலும் கிறித்தவர்களுக்கே சலுகைகள் இருந்தன. இந்துக்களின் புனித நாள்களில் கூட அப்பள்ளிகள் விடுமுறை விடுவது இல்லை.

வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம், கிறித்தவப்பாதிரியார்கள் இந்துக்களை மதமாற்றம் செய்வதில் குறியாக இருந்தனர். இதனை முழு மூச்சாக எதிர்த்தவர் சைவப் பெரியார் அவர்கள். கிறித்தவ சமயத்தினரின் தலையீட்டினால் சைவ சமயத்துக்கு நேரும் இடுக்கணைக் களைந்தெறிவதும், அதன் வழி மதமாற்றத்தைத் தடுப்பதும் சிவபாத சுந்தரனரின் தலையாய நோக்கமாக இருந்தது எதிர்மறை முகத்தான் அச் சமயத்தினைத் தாக்குவதிலும், நம் சைவ சமயத்தினைப் போற்றி, அதன் நல்லியல்களைத் திறம்பட வெளிப்படுத்துவது தான் சிறப்பு என்று இவர் எண்ணினர். எனினும் ஞானப் பிரகாசம் என்ற கிறித்தவப் பாதிரியார் சைவ சமயத்தினைத் தாக்கி பிரசுரங்கள் வெளியிட்டபோது, சிவபாத சுந்தரனர் அவர்கள் அதற்கு மறுப்புகளை அச்சிட்டு அப்பாதிரிக்குப் பதிலடி கொடுத்தார்.

சிறிய தந்தையாரிடம் கற்ற வடமொழி அறிவும், தாமே பயின்ற தமிழறிவும் சைவப் பெரியாருக்குத் துணையாக நின்றன. எனவே தான் அவர் வேதங்களிலும், ஆசிரமங்களிலும் சூழ்ந்த புலமையும் திறமையும் கொண்டு விளங்கினர். அவரது நுண்மாண் நுழைபுலத்திற்குச் சான்று கூறும். கீழ்க்குறிப்பிடப்பட்ட சைவசாத்திர நூல்கள் சித்தாந்தத்தின் உட்கிடக்கையினை இளைஞர்களும் படித்துணருமாறு எளிய தமிழில் கூறுகின்றன.

(i) சைவ சமய சாரம்

(ii) திருவருட் பயன்

(iii) சைவ கிரியா விளக்கம்

(iv) கந்த புராண விளக்கம்

(v) சுப்ர போதம்

(vi) திருவாசக மணிகள்

சைவ சமயத்தின் மாண்பினை ஆங்கிலேயரும் கற்று உணருமாறு இவர் எழுதிய ஆங்கில நூலை (The Saiva School of Hinduism) லண்டனைச் சார்ந்த ஜார்ஜ் ஆலன் அன்ட் அன்வின் கம்பெனியார் — இல் வெளியிட்டனர். இந்நூலின் மறுபதிப்பு ஒன்று அண்மையில் மலேசியாவில் வெளியிடப்பட்டுள்ளது.

1952 - இல் சைவத்தின் பெருஞ்சிறப்பு (The Glories of Saivism) என்ற நூலை ஆங்கிலத்தில் எழுதத் தொடங்கினர். மிகவும் தளர்ந்த வயதினராக இருந்தமை தொடர்ந்து இப்பணியினைச் செய்ய முடிந்தது. உள்ளத்தில் வலிவு இருந்தும், உடல் நலம் பெரிதும் குன்றியிருந்தமையால், நீர் கலந்த பாலைக் கூடச் செரிக்க முடியவில்லை. மனோ வேகத்திற்கேற்பச் செயல் புரியும் இளமைக்காலத்தில் இத்தகு நூல்களை எழுதாமல், வேறுபல நூல்களை எழுதிக் காலத்தைப் போக்கி விட்டேனே என்று அவர் வருந்துவது உண்டு. இருப்பினும 1953 மே திங்களில் இந்நூலினை எழுதி முடித்து விட்டார். அவர் இயற்கை எய்திய பின்னரே இந்நூல் வெளி வந்தது.

உடல் நலம் குன்றியதும், கொக்குவில், மூலை ஆகிய இடங்களில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். உடல்நிலை சற்றே தேறியதும் கந்தவனம் என்ற இடத்துக்குக் கொண்டு வரப்பட்டார். ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்றதும், தமது 55 - ஆவது வயதிலிருந்து கடைசிக் காலம் வரை இக்கந்தவனத்தில் தான் குடில் அமைத்து சைவப்பணி புரிந்து வந்தார். மருத்துவமனையிலிருந்து வந்ததும் கந்தவனத்தில் தனியே அவரால் தங்கியிருக்க இயலவில்லை. எனவே புலோலிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். எலும்பும் தோலுமாய் இளைத்துப்போய்ப் படுக்கையில் இருந்த போதும், தான் கடைசியாக எழுதிய நூலின் 'புரூப் களைப் படித்துத் திருத்தினர் என்பதை எண்ணும்போது அவர்தம மனோவலிமையும் சமயப்பற்றும் நம்மைப் புல்லரிக்க வைக்கின்றன தக்க மருத்துவ உதவி இருந்தும் சைவப் பெரியாரின் இறுதி மூச்சு 1953 - ஆம் ஆண்டு ஆகஸ்டு 14 - ஆம் நாள் அடங்கி விட்டது. ஆசிரிய அலுவலும், சமயத்தொண்டும் இறைபணியும் புரிந்த அந்த ஈழத்துச் சைவப் பெரியாரின் பூத உடல்

மறைந்தாலும் புகழுடம்பு மறைந்திலது. அவர் மறைந்து ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் மலேசியாவிலும், இலங்கையிலும் பல்வேறு துறைகளிலும் பணி புரிந்த அவரது மாணவர்களும், அன்பர்களும் ஒன்று சேர்ந்து சைவப் பெரியாரின் நூற்றாண்டு விழாவினை 1978 - இல் இலங்கையில் கொண்டாடினர்.

வடமொழி பற்றிய அவர் தம் கருத்து:

பிராமண எதிர்ப்பு இயக்கம் சமூக அரசியல் போராட்டமாகத் தமிழகத்தில் தலைதூக்கி நின்ற போதும், மறைமலையடிகளாரின் தனித்தமிழியக்க வளர்ச்சியின்போதும், தமிழகத்தில் வேரூன்றியிருந்த வடமொழியின் பாலிருந்த வெறுப்புணர்ச்சியினை சைவப்பெரியாரால் ஒத்துக் கொள்ள முடியவில்லை. பிராமண எதிர்ப்பு இயக்கம் யாழ்ப்பாணப் பகுதியிலும் பரவத் தொடங்கி, வேதமும் ஆகமங்களும் வெறுத்து ஒதுக்கப்படுவதை அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. உலகில் வடமொழி எந்தத் தனியொரு இனத்தாரின் மொழி அன்று. இலங்கையிலும் இந்தியாவிலும் பயின்று வந்த ஒரு பொது மொழியே என்பது அவர் கருத்து. சான்றாக, பிராமணர் அல்லாத ஆறுமுகநாவலரின் குடும்பத்தைச்சார்ந்த ஞானப் பிரகாச முனிவர் ஏறத்தாழ எட்டு வடமொழி நூல்களை எழுதி உள்ளார் என்பதை நினைவிற் கொள்ளவேண்டும். சமூக, பொருளாதார அரசியல் கண்ணோட்டத்தில் பிராமணீய ஆதிக்கத்தை வெறுப்பதில் நியாயம் இருந்த போதிலும், அந்தக்காரணத்தினாலேயே அம்மொழியினை வெறுப்பதை அவர் விரும்பவில்லை. இதற்குச்சான்றாக ஒரு நிகழ்ச்சியினைக் குறிப்பிடலாம். தமிழ் நமக்குத்தாய்மொழிதான்; ஆயினும் வடமொழி நமக்கு எதிரி அல்ல என்பதே அவர் கருத்து. வடமொழியினைப் பலர் வெறுத்தொதுக்குவதை சைவப் பெரியாரால் பொறுத்துக் கொள்ளமுடியவில்லை. 1946-ஆம் ஆண்டு நிகழவிருந்த ஒரு சைவமாநாட்டிற்குத் தலைமை தாங்குதற்கென்று தமிழகத்திலிருந்து திரு. இளவழகனாரை அழைத்திருந்தார்கள் பயணச் செலவுக்கென்று அவருக்குப் பணமும் அனுப்பிவிட்டார்கள். தனித்தமிழியகத்தின் பேராசானாக விளங்கியமறைமலையடிகளாரின் மாணவரே இளவழகனார். இந்நிகழ்ச்சி பற்றிக் கேள்வியுற்ற சிவபாத சுந்தரனார் இளவழகனாரை இலங்கைக்கு அழைக்க வேண்டாம் என்று மாநாட்டுப் பொறுப்பாளர்களிடம் கேட்டுக்கொண்டார். "இந்தியாவில் இருந்து அம்மை நோய் பரவுவதைத் தடுப்பதற்குச்சட்டங்கள் இருக்கின்றன. தனித் தமிழ்க் கொள்கை இலங்கையில் புகுவதைத் தடுப்பதற்கு ஒரு

சட்டமும் இல்லை' என்று கூறிக் கவலைப்பட்டார். அவருடைய உறுதியான வேண்டுகோளுக்கிணங்க இளவழகனாரின் ஈழத்துப் பயணமும் தடுத்து நிறுத்தப்பட்டது.

ஆலயப்பணி:

தான் கொண்ட கொள்கையில் தளராத பிடிப்பும், ஆழ்ந்த பற்றும் கொண்ட சிவபாதசுந்தரனார் ஆலயத்தொண்டு செய்ததை ஈண்டுக்குறிப்பிடவேண்டும். இலங்கையின் வடக்குப் பகுதியில் மன்னாருக்கு அருகில் திருக்கேதீச்சரம் என்னுமிடத்தில் இருந்த சிவாலயம் பழுதுபட்டுக்கிடந்தது. அப்பர், சம்பந்தர் தேவாரங்களில் இடம் பெற்றிருக்கும் அந்தப்பழம்பெரும் ஆலயத்தைப் புதுப்பிகக வேண்டும் என்று காலஞ்சென்ற ஆறுமுகநாவலரும் 1872-ஆம் ஆண்டிலேயே பெருமுயற்சி எடுத்தார். ஆயினும் எந்தப்பணியும் நடைபெருமலே இருந்தது. 1948-இல் ஆலயத்திருப்பணிச் சபை ஒன்றும் நிறுவப்பெற்றிருந்தது. நான்கு ஆண்டுகள் தலைவராகப் பொறுப்பேற்றிருந்த சிவபாதசுந்தரம் அவர்கள் ஞானசம்பந்தர் பெயரால் முதலில் அங்கே ஒரு திருமடம் கட்டுவித்தார். செங்கற்களால் கட்டப்பட்டிருந்த அச் சிறிய கோயிலை பழுது பார்த்துப் புதுபித்துக் கும்பாபிஷேகத்துக்கும் ஏற்பாடு செய்தார்கள். இந்த இறை பணிக்குத்தாம் தலைமை தாங்கிய தோடன்றி தம்மாலியன்ற பொருளு-தவியும் செய்தார். தொடர்ந்து இப்பணிக்கென்று பொருளுதவி பெறுதற்காக தமது பழைய மாணவர் த. மயில் வாகனம் என்பார் மூலம் மலேசியாவில் ஒரு கிளைச்சபை ஒன்றும் நிறுவச் செய்தார். திருப்பணிக்குழுவினர் அச்சிவாலயத்தில் நவக்கிரகத்துக் கென்று சிறு பகுதியினை ஒதுக்கியபோது ''சிவாலயத்தில் நவக்கிரகங்களை வைத்து வழிபாடு செய்வது சைவ ஆகமங்களுக்கு எதிரானது அதில் எனக்கு உடன்பாடில்லை'' என்று கூறி குழுவின் தலைமைப் பொறுப்பிலிருந்து விலகிக்கொண்டார். ஆயினும் எவர் மீதும் பழி; சுமத்தாமலும், வெறுப்புக் கொள்ளாமலும், அவ்வப்போது அரிய யோசனைகள் வழங்கி வந்தார். திருக்கேதீச்சர ஆலயம் இன்று நிறைவு பெற்று விளங்குவதற்குச் சைவப்பெரியார் செய்த பணி ஈடிணையற்ற-தாகும்.

புலால் உண்ணாமை:

தூய வெண்ணீறு துதைந்த மேனியரான இப்பெரியார் ஒரு பழுத்த சைவர். ஆயினும் கண்மூடித்தனமாக ஒரு கொள்கையினைப்

பிடித்துக் கொள்பவரல்லர். கொல்லாமையும் புலால் மறுத்தலுமே சைவத்தின் தலையாய கொள்கைகள் என்பது நம்மில் ஏறத்தாழ அனைவரது கருத்துமாகும். நடைமுறை உலகில் குறிப்பிட்ட" ஓர் உணவைக் கொள்ளுவதிலோ, தள்ளுவதிலோ சைவசமயம் அடங்கி-யிருக்கவில்லை; சிவ நெறி சார்ந்தவன் வெறும் உள்ளத்தால் பொய்-யாது ஒழுகின அதுவே போதும் "என்பதே அவர் தம் கருத்தாக இருந்தது. இப்படியொரு கருத்தைக் கொண்டிருந்ததனுல், சமயம் வாய்ப் புழி தாமும் ஊன் உண்டிருப்பரோ என்ற ஐயம் சிலருக்கு எழலாம். மரணப்படுக்கையில் இருந்தபோது கூட தனக்குக் கொடுக்-கப்படும் எவ்வகை மருந்தும் ஊன் தொடர்பற்றதாக இருக்க வேண்டும் என்பதில கண்டிப்பாக இருந்தார். தோலினுல் இயன்ற செருப்பினைக் கூட அவர் அணிவதில்லை. மரத்தாலான குமிழ் மிதியடி மீது இவர்ந்து நிமிர்ந்து மெதுவாக நடந்து செலவது இவரது வழக்கம். ஆசிரியப்-பணியிலிருந்து விலகி ஓய்வு பெற்றிருந்த காலை, ஈழத்துப பெரியோர் சிலர் சைவப் பெரியாருக்குப் பாராட்டு விழா எடுக்க முனைந்தனர். பத்திரகாளி கோவிலில் பலி இடுவதைத் தடுத்தால் அதுவே இலங்கைத் தமிழ் மக்கள் எனக்கு எடுத்த இனிய விழாவாகக் கொள்வேன் என்று கூறிவிட்டார். "தன்னூண் பெருக்கற்குத் தான பிறிது ஊன் உண் பான் எங்ஙனம் ஆளும அருள் "என்ற குறளை நினைவுபடுத்துமாறு இருந்தது அவர்தம் அருளார்ந்த வாழ்வு.

சைவப் பெரியார் :

எளிமையான தோற்றமும், மீதூர்ந்த அன்பும் கொண்ட சைவப் பெரியார் ஆசிரியராகப் பணியாற்றுங்கால், மாணவரிடைக் கட்டுப்-பாடும் கடமையும் ஒழுங்கும் வேண்டும் என்று வற்புறுத்துவது வழக்கம். இதனுல் 'கண்டிப்பானவர்' என்று பெயரெடுத்திருந்தாலும் அவர்தம் கருணை உள்ளமும், கனிவார்ந்த உணர்வும், உயரிய அடக்கமும் யாரும் போற்றத்தகும் நல்லியல்புகளாய் இருந்தன. அவரை யாரும் 'சிவனடியார்' என்ற பொருள்படப் பேசி விட்டால், உள்ளம் வருந்துவார். மறுகணமே அதனை மறுத்துப் பேசி விடுவார். சைவப் பெரியாரின் கருத்துப்படி அப்பர், சுந்தரர் போன்ற சிவனடி-யாராக ஒருவன் கருதப்பட வேண்டுமானுல் பன்னூறு பிறப்புகள் எடுக்க வேண்டும். உலகியல் அறிவுக்கு அப்பாற்பட்ட ஜீவன் முக்த நிலையில் தான் உண்மையான கடவுட்பக்தி ஏற்படமுடியும் என்பதே சைவப் பெரியாரின் கருத்து.

சேரமரபு

பண்டித இராமசுப்பிரமணிய நாவலர்
நாகர்கோவில்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி

திருவனந்தபுரம் சேரர்க்குக் கிளைத் தலைநகராய் இருந்து வந்தது என்பதும் ஆண்டைத் திருமால்கோயில் மிகப் பழையதொன்று என்பதும் பெறப்படும். அக்கோயிற் செல்வங்களும் நிலங்களும் 'சீபண்டாரவகை' என்று கூறப்பட்டு வருகின்றன. கோயிற் காணிக்கைப் பெட்டிக்கு 'வஞ்சி' என்று பெயர் வழங்கிவருகிறது. இப்பெயர் சேரர்க்கு வஞ்சி தலைநகராயிருந்தமையைக் குறிப்பிக் கின்றது. 'வஞ்சியூர்' முதலிய ஊர்ப்பெயர்களும் 'வஞ்சி' என்னும் தலைநகர் பற்றி வந்தவைகளாக இருக்கவேண்டும். திருவனந்தபுரம் போலக் கொல்லம், அம்பலப்புழை, ஆற்றின் கல்(ண்) இரணியல்' பதுமநாபபுரம். மணலிக் கரை முதலிய பலவிடங்கள் சேரர் தம் கிளைத்தலைநகர்களாக இருந்திருக் கின்றன. அவ்விடங்களில் சேர-குலத்தவரே அரசாண்டிருந்திருக்கின்றனர். இதனால், சேரர்குலம் உறவினரால் மிகப்பல்கியிருந்த தொன்று என்பது பெறப்படும். பிற்காலத்து இக்கிளையரசர்கள் தனியாட்சி தொடங்கினமையால், சேரர் குலத்தில் பலவகைப் பிளவுகள் ஏற்பட்டன. அப்பிளவுகளை நீக்கித் திருவாங்கூர் என ஒரு நாடாகக்கண்டவர் சீவீரமார்த் தாண்டவன்ம மகாராசர் என்று திருவாங்கூர்ச் சரித்திரம் கூறு-கின்றது.

சேர நாடு பெருநாடாகையால், தென்பாகத்து ஆட்சிக்கு உரியோராக ஏற்படுத்தப்பட்ட அரசர்கள் கிளைத்தலைநகர்களில் வைத்து முடிபுனை-யும் வழக்கம் இருந்து வந்தது. அந்நகர்களில் திருவனந்தபுரம் இரணியல் முதலியனவும் கொள்ளப்படும். இரணியல் பதுமநாபபுரம் மணலிக்கரை முதலிய ஊரில் உள்ள அரண்மனைகள் பிற்காலத்தவை. இன்னவைற்றும் முறபட்டது திருவனந்தபுரம் என்பதற்கு நூற்-சான்றுகள் காணப்படுகின்றன. சேரமான் பெருமாள் காலத்துச்-செய்யுட்களில் 'இரணியல்' என்னும் ஊரைப்பற்றியாதும் கூறப்-படவில்லை. நாயனார் திருவஞ்சைக்களத்திலே இருந்தாகப் பெரிய-புராணம் கூறுகின்றது. திருவஞ்சைக்களம் தலைநகராயினும் ஆட்சி-யரசர் அதற்கடுத்த கொடுங்கோளூரில் (கொடுங்கலூரில்) இருந்து-

வந்ததாகவே பெரியபுராணங் கூறுகின்றது. ஆதலால், கொடுங்கோளூரும் சேரர் தலைநகராகக் கொள்ளத் தக்கதொன்று. கொடுங் கோளூரரசர்க்குத் திருப்பூணித்துறையில் இப்பொழுதும் அரண்மனை இருக்கிறது. பிளவுகள் உண்டானபின் ஒவ்வொரு தலைநகரத்து அரசர்களும் பிரித்தாளத் தொடங்கினர். கொடுங்கோளூர் அரசைச் சார்ந்த இடங்கள் பல கொச்சி திருவாங்கூர்களைச் சேர்ந்திருக்கின்றன.

சேரமான் பெருமாள் நாயனார்க்கு முன் அரசாண்டவன் இளஞ்சேரலிரும் பொறை என்னும் செங்கோற் பொறையன். அவரது இளவலே சேரமான் பெருமாள் நாயனார். செங்கோற்பொறையன் தவஞ்செய்யச் சென்ற பொழுது, முதியோர் சேரநாட்டாட்சி செய்யுமாறு சேரமான் பெருமாளை வேண்டினர். அவர் சிவபெருமான் திருவடி வழிபாட்டில் ஈடுபட்ட சிந்தையராய் மூவாசை வெறுத்திருந்த முதல்வராகையால், அரசாட்சியை விரும்பாது, இறைவன் திருவருளை அறியும் பொருட்டுத் திருவஞ்சைக் களத்தில் கோயில் கொண்ட சிவபெருமானிடம் சென்று அவன் திருவருளைச் சிந்திப்ப, இறையருளால் அன்னார்க்குப் பிறர் மறைவிற் கூறுவதே அறியும் வல்லமையும் ஈறில் அறிவும் விறலும் படைவாகனங்களும் கொடையியல்பும் வன்மையும் பத்திமை மாருச் சிந்தையும் பிறவும் எய்தின. இறைவழிபாட்டுக்கு மாறுபடாவண்ணம் அவர் ஆட்சி செலுத்தி வந்தார். அவர்க்குக் கழறிற்றறிவார் என்னும் திருப் பெயரும் உண்டு. கீழ்வருவன பெரியபுராணச் சான்றுகள்:

'மாவீற்றிருந்த பெருஞ் சிறப்பின்
　　மன்னுந் தொன்மை மலைநாட்டுப்
பாவீற்றிருந்த பண்புகழில்
　　பயிலு மியல்பிற் பழம் பழிதான்
சேவீற்றிருந்தார் திருவஞ்சைக்
　　களமும் நிலவிச் சேரர் குலக்
கோவீற்றிருந்து முறை புரியும்
　　குலக்கோ மூதூர் கொடுங்கோளூர்

'மண்மேற் சைவ நெறி வாழ
　　வளர்ந்து முன்னை வழியன்பால்
கண்மேல் விளங்கும் நெற்றியினர்
　　கழலே பேணுங் கருத்தினராய்

உண்மே விய வன்பினராகி
உரிமையரசர் தொழில் புரியார்
தெண்ணீர் முடியார் திருவஞ்சைக்
களத்தில் திருத்தொண்டே புரிவார்.

நீரின் மலிந்த கடலகழி
நெடுமால் வரையின் கொடி மதில்சூழ்
சீரின் மலிந்த திருநகரம்
அதனிற் செங்கோற் பொறைய னென்னும்
காரின் மலிந்த குடைநிழன்மேல்
கவிக்குங் கொற்றக் குடைநிழற்கீழ்த்
தாரின் மலிந்த புயத்தரசன்
தரணி நீத்துத் தவஞ் சார்ந்தான்,

எய்தியவர் தாம் மதிலிறைஞ்சி
இருந்தன சாரல் மலைநாட்டுச்
செய்தி முறைமை யாலுரிமைச்
செங்கோல் அரசு புரிவதற்கு
மைதீர் நெறியின் முடி சூடி
யருளு மரபால் வந்த தென
பொய்தீர் வாய்மை மந்திரிகள்
போற்றிப் புகன்ற பொழுதின் கண்

இன்பம் பெருகுந் திருத் தொண்டுக்
கிடையூருக இவர் மொழிந்தார்
அன்பு நிலைமை வழுவாமை
அரசு புரக்கு மருளுண்டேல்
என்பு மரவும் புனைந்தாரை
இடைபெற்றறிவே னெனப்புக்கு
முன்பு தொழுது விண்ணப் பஞ்
செய்ய முதல்வ ரருளினன்.

மேவு ருரிமை யரசளித்தே
விரும்பு காதல் வழிபாடும்
யாவும் யாருங் கழறினவும்
அறியு முணர்வு மீறில்லாத்

தாவில் விறலுந் தண்டாத
கொடையும் படைவா கன முதலாம்
காவல் மன்னர்க் குரியனவும்
எல்லாம் கைவந் துறப்பெற்ருர்.

சேரமான் பெருமாள் நாயனுரும் சுந்தர மூர்த்தி நாயனுரும் ஒரு காலத்தவர்கள். நாயனுர்க்கு முந்தின அரசர் செங்கோற் பொறையர், பதிற்றுப் பத்து ஒன்பதாம் பத்துச் செங்கோற் பொறையைக் குறிக்கின்றது. செங்கோற் பொறையர்க்கு முந்தினவர் செங்குட்டுவர். அவர்காலத்து நிகழ்ந்தது சிலப்பதிகாரம். சிலப்பதிகாரம் தோன்றிய காலத்து இருந்த பாண்டியன் நெடுஞ்செழியன். அக்காலத்துக் சோழன் கரிகாற் பெருவளத்தான் நெடுஞ்செழியனுக்கு முன்னிருந்த உக்கிரப் பெருவழுதி காலத்தில் திருக்குறள் அரங்கேற்றப் பெற்றது. திருக்குறளடிகள் சிலப்பதிகாரத்துக் காணப்படுகின்றன. எனவே, திருக்குறளின் தோற்றத்திற்கு மிக அடுத்த பிற் காலத்தில் சிலப்பதிகாரம் தோன்றி யிருக்கிறது. திருக்குறளுக்கு அதன் ஆசிரியர் காலத்திலேயே பெருமாண்பு தோன்றியது என்பது சங்க நூல்கள் அந்நூலைத் தழுவி எழுதுவதனுலும் திருவள்ளுவமாலையாலும் பெறப்படும்.

சேரமான் பெருமாள் நாயனுர் சுந்தரமூர்த்தி நாயனுருடன் கைலை சென்று முத்தி பெற்ருர். அவர் இரணியலில் முடிசூட்டினுர் என்பது பொய்வழக்காகும். இரணியல் பிற்காலத்துச் சேரர் கிளையரசர்க்கு முடிசூட்டிடமாக இருந்திருக்கவேண்டும்.

சேரர்மூலம் சிவபத்தியில் தலை சிறந்த சேரமான் பெருமாளையும் திருமால் பத்தியில் தலைசிறந்த குலசேக ராழ்வாரையும் நமக்கு உதவி இருக்கிறது. நாயனுர் அறுபான் மும்மை நாயனுருள் ஒருவர் ஆழ்வார் பன்னீராழ்வார்களுள் ஒருவர். சேரர் சைவ வைணவ மதங்களுக்கு உரிமை உடையவராய் மதவேற்றுமை இன்றி அரசாண்டுவந்தனர் என்பதற்கு இவ் வரலாறும் சான்று பகரும்.

கடவுட் பக்தி

சேரவரசர்கள் கடவுள் பத்தியில் மிகச் சிறந்தவர்கள். சேரமான் பெருமாள் நாயனுர் சிவபெருமான் அருளினுல் கைலைக்குச் சென்று ஆதி உலாவைத் தேவரும் முனிவரும் கூடிய அவையில் சிவபெருமான் கேட்ப அரங்கேற்றினுர் என்று சொல்லப்படுகிறது.

அவர் கைலாயம் சென்று மீண்டதாக நூல்களால் அறியப்படவில்லை. அவரது வரலாற்றைப் பெரியபுராணம் அழகாகக் கூறுகிறது. அவர் மெக்காவுக்குச் சென்றார் என்பது இடையே கட்டிய பெரும் பொய். அவர்க்கும் மெக்காவுக்கும் எவ்விதத்தொடர்பும் இல்லை அவரது ஆதிஉலா பத்திச் சுவைக்கு உறையுள் என்றே கூறவேண்டும். அது அகப்புறப் பொருள்வாயிலாகப் பத்திச்சுவையை ஊட்டுகிறது

குலசேகரர் திருமால் பத்தியில் சிறந்தவர் பாகவதர்கள் எம்பெருமான் அணியொன்றைத் திருடிவிட்டதாக அமைச்சர் கூறியது பொய் என்பதை விளக்க அவர் பாம்புக்குடத்தில் கையிட்ட வீரர்.

இராமாயண விரிவுரையைக் கேட்டிருக்கும் பொழுது, கதை நடப்பதாகவே மெய்ம்மறந்து கருதி, கரதூடணதிரிசிரா அரக்கர்களுடன் போர் செய்த இராமனுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று கருதிப் படையோடு எழுந்து புறப்பட்டவர் திருவரங்கப் பெருமானிடத்து உள்ளம் நீங்காத உரன் உடையாளர்.

'இருளிரியச்சுடர் மணிகள் இமைக்கும் நெற்றி
இனத்துத்தியணிபண மாயிரங்களடர்ந்த
அரவரசப் பெருஞ்சோதியனந்த னென்னும்
அணி விளங்கும் உயர் வெள்ளை அணையை மேவி
திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப்பொன்னி
திரைக்கையால் அடிவருடப் பள்ளி கொள்ளும்
கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டென்
கண்ணிணைகள் என்றுகொலோ களிக்கும் நாளே'

என்பதனால் இறைக்காட்சியில் அன்னார்க்கிருந்த அடங்கா ஆர்வம் புலனாகின்றது.

'ஊனேறு செல்வத்து உடற்பிறவி யான்வேண்டேன்'
என்கின்றார் எனின் எதை வேண்டுகின்றார்?

'ஆனேறேழ் வென்றானடிமைத் திறமல்லால்
கூனேறு சங்கமிடத்தான் தன் வேங்கடத்துக்
கோனேரி வாழுங் குருகாய்ப் பிறப்பேனே

என வேண்டுகின்றார்.

'ஆனாத செல்வந் தரம்பையர்கள் தற்சூழ
வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்'

என்றவர்,

'தேனார்பூஞ் சோலைத்திருவேங்கடச் சுனையில்
மீனாய்ப்பிறக்கும் விதியுடைய னாவேனே'

என்கின்றார்.

'கம்பமதயானைக் கழுத்தகத்தின் மேலிருந்து
இன்பமருஞ் செல்வமும் இவ்வரசும் யான்வேண்டேன்
எம்பெருமானீசன் எழில் வேங்கடமலைமேல்
தம்பகமாய் நிற்குந் தவமுடையை னாவேனே'

என்பதும் காண்க.

'செம்பவள வாயான் திருவேங்கடமென்னும்
எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனுமாவேனே'

என்று இறுதியாகக் கூறுகின்றார். அன்னார் இவ்வரசியலை விரும்பவில்லை. எம்பெருமான் அடிகளையே வேண்டினர். திருமால்பத்தி அவர் நாடிதொறும் உதிரத்துளி தொறும் கலந்து விளங்கியது.

(i) பிறவிதொறும் பிறவிதொறும் உன்னுடைய சரணார விந்தங்களில் எனக்கு உன்னருளால் மறப்பின்மை உண்டாக வேண்டும். முகுந்த! இது ஒன்று தலையால்பணிந்து உன்னை இரந்து கேட்கின்றேன்''.

(ii) 'நரகாந்தக சுவர்க்கத்திலாவது பூமியிலாவது நரகத்திலாவது எனக்கு வாழ்வு இருக்கட்டும் சரற் காலத்துத் தாமரை மலரை வென்ற தேவரீர் திருவடிகளை மரணகாலத்திலும் மிகவும் சிந்திப்பேனாக'',

(iii) 'புவனங்களுக்குத் தலைவனே, தேவரீருடைய திருவடி மலர்களில் கணப்போதாகிலும் பத்தி இல்லாத பொறியிலிகளைக் (கண்கொண்டு) நோக்கேன்; செவிக்கு இனிமையான பிரபந்தத்தை உடைய தேவரீரது சரிதத்தை விட்டு வேறு நூல்களைக் கேளேன்; மாதவ, தேவரீரையும் புறக்கணிப்பவர்களை மனத்தினால் நினையேன்; பிறபிற பிறவிகளிலும் தேவரீர் திருவாராதனம் 'இல்லாதவனாக இருக்கமாட்டேன்' தனம் இல்லாதவனாக இருக்கமாட்டேன்' இவற்றால் குலசேகர் பத்தி செவ்வனம் அறியப்படுகின்றது காண்க.

கல்விநலம்

சேரரில் பலர் புலவர்கள். அவருள் நூல்கள் இயற்றினருந் தமிழ்ப்பாடல்கள் இயற்றினரும் பலர்.

சிலப்பதிகாரம் சேரன் செங்குட்டுவேன் இளவலார் இளங்கோவடிகளால் இயற்றப்பெற்றது. இது மூவேந்தராலும் போற்றத் தக்க நூல் என்பது முடிகெழு வேந்தர் மூவர்க்குமுரியது அடிகள் நீரேயருளுக என்ற சாத்தனுர் வாக்கால் அறியலாகும். கீழ்வருவன சில சிலப்பதிகாரத்துள் வருவன.

'அலைநீரோடை மலைமுலையாகத்
தாரப்பேரியாற்று மரிக் கூந்தல்
கண்ணகன் பரப்பின் மண்ணக மடந்தை
(சிலப். 5)

'புண்ணிய நறுமலராடை போர்த்துக்
கண்ணிறை நெடுநீர் கரந்தனளடக்கிப்
புனல்யாறன்றிது பூம்புனல் யாறென
அனநடை மாதரு மையனுந்தொழுது
(சிலப். 13)

'கருநெடுங்குவளையு மாம்பலுங் கமலமும்
தையலுங் கணவனுந் தனித்துரு துயரம்
ஐயமின்றி அறிந்தன போல
பண்ணீர் வண்டு பரிந்தினைந் தேங்கிக்
கண்ணீர் கொண்டு காலுற நடுங்க'
(சிலப். 13)

புறப்பொருள் வெண்பாமாலை என்பதொரு இலக்கண நூல் சேர அரசர் ஒருவராலே செய்யப்பட்டது.

'மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலையிருந்த சீர்சால் முனிவரன்
தன்பாற் தண்டமிழ்த் தாவின் றுணர்த்த
துன்னருஞ் சீர்த்தித் தொல்காப்பியன் முதல்

பன்னிருபுலவரும் பாங்குறப் பகர்ந்த
பன்னிரு படலமும் பழிப்பின் றுணர்ந்தோன்
ஓங்கிய சிறப்பினுலக முழுதாண்ட
வாங்குவிற் நடக்கை வானவர் மருமான்
ஐய னரிதன்அகலிடத் தவர்க்கு
மையறு புறப் பொருள் வழாலின்று விளங்க
வெண்பாமாலை யெனப் பெயர்நிறீஇப்
பண்புற மொழிந்தனன் பான்மையிற் தெரிந்தே'.

என்பதனால் அஃது உணரப்படும்.

'ஒன்றிலிரண்டாய்ந்து மூன்றடக்கி நான்கினால்
வென்று களங் கொண்ட வேல்வேந்தே — சென்றுலாம்
ஆழ்கடல் சூழ் வையகத்தில் ஐந்து வென்றுற சுற்றி
ஏழ்கடிந் தின்புற் றிரு'

(புறப். 9. 34)

(வேட்டங் கடுஞ் சொல் மிகுதண்டம் சூதுபொருள் - ஈட்டங்கள் காய மிவை யேழு.')

திருக்கைலாய ஞான உலா என்பது சேரமான் பெருமாள் நாயனா-ரால் செய்யப்பட்டது. எளிமையும் இனிமையும். வாய்ந்து, கற்போர் உள்ளங் கரையும். பத்திச் சுவை கனிந்து ஒழுகுவது.

திருமாலு நான்முகனுந் தேர்ந்துணரா தன்றங்
கருமா னுறவ லாய் நின்ற—பெருமான்
பிறவாதே தோன்றினன் காணாதே காண்பான
துறவாதே யாக்கை துறந்தான் முறைமையால்
ஆழாதே யாழ்ந்தான் அகலா தகலியான்
ஊழா லுயராதே யோங்கினன்—சூழொளிநூல்
ஓதாதுணர்ந்தானுணுகாது நுண்ணியான்
யாது மணுகாதணுகியானாது —
அரியாகிக் காப்பானயனாய்ப் படைப்பான்
அரனாயழிப்பவனுந் தானே—பரனாய
தேவ ரறியாத தேற்றத்தான் தேவளர்த்தான்
மேவிய வாறே விதித்தமைத்தான் —ஓவாதே

எவ்வுருவில் யாரொருவ ருன்குவா ருள்ளத்துள்
அவ்வுருவாய்த் தோன்றி அருள் கொடுப்பான்—எவ்வுருவும்
தானேயாய் நின்றளிப்பான தன்னிற் பிறிதுருவம்
ஏனோர்க்குங் காண்பரிய எம் பெருமான்.'

என்று உலாவில், நாயனுர் சிவ பெருமானைச் சிறப்பித்துக் கூறி உள்ளார். மேலும், சேரமான் பெருமான் நாயனுர் கனகசபையில் பொன் வண்ணத்தந்தாதியும் திருவாரூரில் திருமும் மணிக்கோவை-யும் பாடி இறைவனைத் துதித்தார்

பெருமாள் திருமொழி குலசேகரவித்வார் என்னும் சேர அரசப் பெருந்தகையால் அருளப்பெற்றது.

'புண்டரிக மலரதன்மேல் புவனியெல்லாம் படைத்தவனே
திண்டிறலாள் தாடகை தன் உரமுரு வச்சிலை வளைத்தாய்
கண்டவர் தம் மனம் வழங்குங்கண புரத் தெங்கண்மணியே
எண்டிசையு மாளுடையாய் இராகவனே தாலேலோ.'

என்பது பெருமாள் திருமொழிச் செய்யுட்களில் நன்று.

முகுந்தமாலை, விச்சின்னுபிஷேகம். ஆச்சரிய சூடாமணி, தபதீசுயம் வரம் முதலிய வடமொழி நூல்களும் குலசேகரப் பெருமானுரால் அருளப்பட்டன.

தகடூர்யாத்திரை' என்னும் நூல் பெருஞ்சேரலிரும்பொறை தகடூர்-எறிதற்குச் சென்ற வரலாறு கூறுகின்றமையால், அந்நூலும் சேரர்க்கு உரிமைப்பட்டதாகும்.

'பல்வேற்றானை யதிக மானொ
டிருபெரு வேந்தரைய முனிலைவென்று
முரசுங் குடையுங் கலனுங்கொண்டு
உரைசால் சிறப்பினடுகளம் வேட்டுத்
துகடீர் மகளிரிரங்கத் துப்பறுத்'

'தகடூரெறிந்து' நொச்சி தந்தெய்திய அருந்திற லொள்ளி சைப் பெருஞ் சேரலிரும் பொறை.

சேரர் (பதிற். 8–பதி) என்பதாலும் தகடூர் எறிந்தமை பெறப்படும்.

எட்டுத்தொகை நூல்களில் ஒன்ருகிய கலித் தொகையில் பாலைப் பகுதி பாலைபாடிய பெருங்கடுங்கோ' என்னும் சேர அரசராலேயே பாடப்பட்டது. அந்நூலின் சொல்லும் பொருளும் கற்ருர் உள்ளத்-தைக் கவர்வன. இவ்வரசர் பாடிய தனிப் பாடல்கள் பல உள.

ஏனைய தொகை நூல்களிலும் சேர அரசர்கள் புகழப் படுகின்றனர்.

ஐங்குறுநூறு' என்னும் நூலைத் தொகுத்தவர் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும் பொறை எனனும் சேரர். அந் நூலில் முதல் வரும் மருதத்திணை முதல் வேட்கைப்பத்து அதன அவினி என்னும் சேர அரசனையும், இரண்டாவது மருதத்திணை தொண்டிப்பதது சேரர் தொண்டித் துறைமுகத்தையும் புகழ்கினறது. இவ்வாற்ருல் ஐங்குறு-நூறு சேரநாட்டு நூல எனக் கூறவேண்டும்.

கூடலூர் கிழார், கபிலர் முதலியோர் சேர நாட்டுப் புலவர்கள். தொல் காபபியங்கேட்ட அதங்கோட்டாசிரியரும் சேர நாட்டவர்-என்பா. அதன்கோடு (அதனகோடு) என்பதொரு ஊர் சேர நாட்டுக் குழித்துறைப் பக்கத்து உள்ளது. கபிலரையன்றிப் பதிற்றுப்பத்துப் பாடிய பரணர் முதலியோரும் சேர அரசர்களை மிகுதியாகச் சிறப்பித் திருக்கின்றனர். சாத்தனர் என்னும் புலவர் சேரன் செங்குட்டுவனைப் புகழ்ந்தவர். கண்கள் மயக்கத்துக் காதலோடிருந்த —தண்டமிழாசான் சாத்தன் எனச் சாத்தனர் சேரன் செங்குட்டுவன் மலைவளங்காணச் சென்ற காலத்து அவனைச்சென்று கண்டமையை இளங்கோவடிகள் அழகாகக் கூறுகின்றனர்.

(தொடரும்)

கடலைப் பற்றி......

—திரையன்

இந்த உலகம் நான்கில் மூன்று பாகம் (91%) கடலால் ஆனது. ஆண்டுதோறும் கடலின் பல இலட்சக்கணக்கான டன் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. மனிதனின் உணவுத் தேவையை இவை ஓரளவு நிறைவு செய்கின்றன. கடலின் அடியில் நிலத்தில் இருப்பதை விட அதிக அளவு கனிப்பொருள்கள் காணப்படுகின்றன. கடலின் தோற்றம், அதன் பயன்கள் அதில் வாழ்கின்ற விலங்குகள் ஆகியன பற்றி இக் கட்டுரை எடுத்துக் கூறும்.

கடலின் தோற்றம்:

இவ்வுலகம் தோன்றுவதற்கு முன்பு பரந்த அண்டத்தில் நெருப்புக் கோளம் ஒன்று சுற்றிக் கொண்டிருந்தது. இதற்கு நெபுலா என்று பெயர். இதிலிருந்து சுமார் 5000 மில்லியன் (1மில்லியன்-=10லட்சம்) ஆண்டுகளுக்கு முன்பு வெடித்துச் சிதறியதே உலகம். இதைப்போலவே மற்ற கிரகங்களும் தோன்றின. தொடக்கத்தில் பூமியும் ஒரு நெருப்புக் கோளமாக இருந்தது. நாளடைவில் படிப்படியாக குளிர்ந்து கெட்டியானது. எடை அதிகமுள்ள இரும்பு நிக்கல் போன்ற கனிமங்கள் பூமியின் அடிப்பகுதியில் தங்கின. எடை குறைந்த சிலிக்கன் முதலிய கனிமங்கள் பூமியின் மேல் ஓடாக அமைந்தன. ஆக்சிஜனும், ஹைட்ரஜனும் இணைந்து நீராவாயு தோன்றியது. நீர்வாயு மேகமாக மாறியது. பல நூற்றாண்டுகள் மழை விடாமல் பொழிந்தது. பூமியின் ஆழ்ந்த பள்ளங்களில் தண்ணீர் தேங்கி கடல் உருவானது. ஆரம்பத்தில் கடல் நீர் உப்பாக இருக்கவில்லை.

கடல் நீர் ஏன் உப்பாக இருக்கிறது?

ஆறுகள் நிலத்தில் உள்ள உப்பைக் கரைத்துக் கொண்டு போய்க் கடலில் சேர்க்கின்றன. கடல் நீரானது சூரிய ஒளியின் காரணமாக நீராவியாக மாறும்போது நீர் போக எஞ்சிய உப்பு கடலில் தங்கி விடுகிறது. நீராவி நிலத்தில் மழையாகப் பொழியும் போது மழை நீர் மறுபடியும் நிலத்திலிருந்து உப்பைக் கடலில் கொண்டு சேர்க்கிறது. இந்நிகழ்ச்சி பல நூற்றாண்டுகள் தொடர்ந்து நடந்ததன்

காரணமாக கடல் நீர் உப்பாக மாறியது. இவ்வாறுதான் ஆண்டு-தோறும் கடல்நீரில் உப்பின் அளவு கூடிக்கொண்டே போகிறது. 1000 பங்கு கடல் நீரில் 35 பங்கு உப்பு நிரம்பியுள்ளது.

கடலுக்கு அடியில் நிலத்தைப் போலவே மலைகளும், சம-வெளிகளும் உள்ளன. சில இடங்களில் கடலுக்கு அடியில் உள்ள மலைகள் தண்ணீருக்கு வெளியே வந்து தீவு போல் அமைவதுண்டு. அமெரிக்க நாட்டைச் சேர்ந்த ஹவாய் தீவுகள் இந்த வகையைச் சார்ந்தவையே. கடலுக்கு அடியில் எரிமலைகளும் உள்ளன.

பவளத் தீவுகள் என்பவை பவளப்பூச்சிகளால் உண்டாக்கப்-படுகின்றன. பவளப்பூச்சிகள் பூச்சி வகையைச் சார்ந்தவை அல்ல. இவை குழியுடலி வகையைச் சார்ந்தவை. பவளப்பூச்சிகள் கடல் நீரிலுள்ள சுண்ணாம்புப்பொருளை பிரித்து தம்மைச்சுற்றி கூடு கட்டுகின்றன. பின்னர் உள்ளிருக்கும் பூச்சி மறைந்த பின் கடினமான கூடுகள் பல ஒன்று சேர்ந்து பாறைகளாகின்றன. நூற்றுக் கணக்கான ஆண்டுகள் சென்றபின் பவளத் தீவுகள் தோன்றுகின்றன. பசிபிக் கடலில் உள்ள பல தீவுகள் பவளத் தீவுகளாகும். பவளங்கள் பல நிறங்களில் உள்ளன. இவைகள் அணிகள் செய்யவும் பயன் படுகின்றன

கடலின் சராசரி ஆழம் இரண்டு முதல் மூன்று மைல்களாகும். பசிபிக்கடலின் சில பகுதிகள் ஆறு மைல் ஆழம் கொண்டவை என்று கணக்கிட்டுள்ளனர்.

சூரிய ஒளியின் காரணமாக சுமார் நூறு அடி ஆழம் வரை கடலின் மேற்பகுதி சூடாகிறது இந்தச் சூடான மேற்பாகமே கடல் நீரோட்டங்களை ஏற்படுத்துகிறது. இந்நீரோட்டங்களை கடலில் ஓடும் ஆறுகள் என்று குறிப்பிடலாம்.

கடலின் உள்ளே செல்லச் செல்ல நீரின் அழுத்தம் அதிகமாகும். 35 அடி ஆழத்தில் வெளியில் உள்ள அழுத்தத்தை விட ஒரு மடங்கு அதிகம் காணப்படும். ஒரு இலேசான மரக்கட்டையை கடலின் மிக அதிக ஆழத்திற்கு எடுத்துச்சென்று பிறகு வெளியே மிதக்கவிட்டால் மிதக்காது ஏனென்றால் மிக அதிக அழுத்தத்தின் காரணமாக கட்டை-யில் உள்ள மிக நுண்ணியதுளைகள் உடைந்து அதில் தண்ணீர் புகுந்திருக்கும். நீரின் அழுத்தத்தை விளக்குவதற்கு இச்சான்றே போதுமானது

கடலில் மூன்று மைலுக்கு மேற்பட்ட ஆழத்திலும் மீன்கள் வாழ்கின்றன. இந்த மீன்களின் உடலில் தண்ணீர் அதிகம் இருப்பதால் நீரின் அழுத்தம் இவைகளைப் பாதிப்பதில்லை. இருந்தாலும் மிகக் குறைந்த அளவு காற்றேனும் இவற்றின் உடலில் இருக்கும். இம் மீன்களை மேற்பகுதிக்கு கொண்டு வந்தால் திடீரென்று ஏற்படும் அழுத்தக் குறைவின் காரணமாக வெடித்துச் சிதறிவிடும்.

துருவப் பிரதேசங்களில் கடலின் மேற்பாகம் பனிக்கட்டியால் மூடப்பட்டிருக்கும். உடைந்த பனிக்கட்டிகள் பல ஒன்று சேர்ந்து பனிப் பாறையாக உருவாகிவிடும். கோடையில் இவை அண்டார்டிக் பகுதியை விட்டு தெற்கு நோக்கி நகர ஆரம்பிக்கும். சில பனிப்பாறைகள் 30 மைல் நீளம் வரை இருக்கும்! சில சமயம் கப்பல்கள் இப்பாறைகளின் மேல் மோதிவிடுவதுமுண்டு. 1912 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 ஆம் தேதி டைட்டனிக் (Titanic) என்ற கப்பல் 2000 பயணிகளுடன் சௌத்தாம்டனிலிருந்து. நியூயார்க் நோக்கிச் சென்று கொண்டிருந்தது. இது ஒரு பனிப்பாறையில் மோதி மூழ்கியதன் காரணமாக 1500 பேர்கள் இறந்தனர் அந்தக் காலத்தில் பயணிகளுக்குரிய கப்பல்களுள் இதுவே மிகப்பெரியதாக இருந்தது.

கடலில் இலட்சக் கணக்கான தாவரங்களும், விலங்குகளும் காணப்படுகின்றன. உலகத்திலேயே மிகப்பெரிய விலங்கு திமிங்கிலம். நீலத் திமிங்கிலத்தின் நீளம் 90 அடி இதன் எடை 70 டன் வரை இருக்கும். திமிங்கிலம் முதலில் நிலத்தில் வாழ்ந்தது. அதிகப்படியான எடையின் காரணமாக நிலத்தில் வாழ்வதும், இடம் பெயர்வதும் அதற்குச் சுலபமாக இல்லை. எனவே காலப்போக்கில் அது கடலில் சென்று வாழ ஆரம்பித்தது என்று உயிர் நூலார் கூறுகின்றனர். திமிங்கிலம் குட்டி போட்டு பாலூட்டும் வகையைச் சார்ந்தது. இதன் தலையின் மேற்பகுதியில் நாசித்துவாரங்கள் உள்ளன. நீருக்கு வெளியே வந்து காற்றை எடுத்துக் கொண்டு பின் நீருக்குள்ளே சென்று விடும். வெளியில் வராமல், அரைமணி நேரம் வரை கடலின் அடியில் இருக்கும் ஆற்றல் பெற்ற திமிங்கிலங்களும் உள்ளன. திரும்பவும் வெளியே வந்து காற்றை வெளிவிடும்போது கடல்நீர் ஊற்றுப் போல் பீச்சியடிக்கும். திமிங்கிலத்தின் உணவு ஆல்கா போன்ற சிறு தாவரங்களாகும். இறைச்சியை மட்டுமே தின்று வாழும் திமிங்கிலங்களும் உள்ளன. திமிங்கிலங்களை வேட்டையாடி வந்ததன் காரணமாக

இப்போது இதன் இனம் வெகுவாகக் குறைந்து விட்டது. திமிங்கிலங்களை வேட்டையாடக் கூடாது என்று பல நாடுகள் சட்டம் இயற்றியுள்ளன.

கடலின் மிக அதிக ஆழம் இருட்டாக இருக்கும். கடல் தாவரங்கள் இங்கு வளர்வதில்லை இங்கு வாழும் மீன்கள் ஒன்றையொன்று தின்று உயிர்வாழ்கின்றன. இருட்டாக இருப்பதால் சில மீன்கள் ஒளிவிடும் தன்மை கொண்டவையாக உள்ளன. இம்மீன்கள் பிரகாசமான ஆரஞ்சு, பச்சை வண்ண ஒளியை வெளியிடும்.

சில மீன்கள் மின்சக்தியை உற்பத்தி செய்யும் ஆற்றல் கொண்டவையாக விளங்குகின்றன. மின்திருக்கை என்னும் மீன்கள் இந்திய-அட்லாண்டிக் பெருங்கடல்களில் வாழ்கின்றன. ஒன்றரை மீட்டர் நீளமும் ஒரு மீட்டர் அகலமும் உள்ள இம்மீன்களின் உடம்பின் இரு, பக்கங்களிலும் மின்னுறுப்புகள் உள்ளன. இரையை மின் அதிர்ச்சி மூலம் தாக்கிச் செயலிழக்கச் செய்து பின் அதை உண்ணும்.

கடலின் மூலம் மின்சாரம்:

கடலின் மேற்பகுதி சூடாகவும் அடிப்பகுதி குளிர்ச்சியாகவும் இருக்கும். மேற்பகுதியின் சூட்டைப் பயன்படுத்தி திரவ அம்மோனியா வாயுவாக மாற்றப்படுகிறது. இந்த வாயுவைக் கொண்டு டர்பைன் இயந்திரங்களை இயக்கி மின்சாரம் பெறலாம். உபயோகப்படுத்திய வாயுவை கடலின் அடிப்பகுதிக்குச் செலுத்தி அங்குள்ள குளிர்ச்சியைப் பயன்படுத்தி அதனை மீண்டும் திரவ அம்மோனியாவாக ஆக்கலாம். பின்பு இதனை சூடான மேற்பகுதிக்குக் கொண்டுவந்து மறுபடியும் வாயு வாக்கலாம். இத்திட்டத்தின்படி தமிழகத்தில் வங்கக் கடலோரப் பகுதியில் மின்சாரம் தயாரிக்கும் நோக்குடன் பொறியியலார் குழு ஒன்று அமெரிக்கா சென்று வந்தது. ஒரு அமெரிக்க நிறுவனம் (The General Electric company) 25 மில்லியன் வாட் மின்சக்தி உற்பத்தி செய்யக்கூடிய திட்டத்தை தயாரித்துக் கொடுத்துள்ளது இத்திட்டத்தை செயல்படுத்த மத்திய அரசின் அனுமதி தமிழக அரசினால் எதிர் நோக்கப்படுகிறது.

மிதக்கும் நகரங்கள்:

நிலப்பகுதியில் மக்கள் தொகை அதிகரித்து வருகிறது. மிதவை நகரங்கள் அமைப்பதன் மூலம் ஜன நெருக்கடியை தவிர்க்கலாம். கடல்

நீரிலிருந்து நன்னீரை உருவாக்கும் இயந்திரங்கள் மிதவை நகரங்களில் அமைக்கப்பட்டிருக்கும். கி.பி. 2000 அளவில் பல மிதவை நகரங்கள் தோன்றலாம். ஜப்பான் ஏற்கனவே 1975 ல் ஒரு மிதவை நகரத்தைக் கட்டி அதனைக் காட்சிப்பொருளாக் வைத்தது.

கடலிலிருந்து கனிப்பொருள்கள்:

உலகில் கனிப்பொருள்களின் இருப்பு குறைந்து கொண்டே வருகிறது. கடலின் தரையில் ஏராளமான அளவு கனிப்பொருள்கள் சிதறிக் கிடக்கின்றன. நிலத்தில் இன்னும் நாற்பது ஆண்டுகளுக்குப் போதுமான அளவே தாமிரம் உள்ளது. ஆனால் கடலடியில் இந்த உலகின் தேவையை 6000 ஆண்டுகளுக்கு நிறைவு செய்யும் வகையில் தாமிரம் உள்ளது. இதைப்போலவே நிக்கல, அலுமினியம் முறையே 150,000 20,000 ஆண்டுகள் நிறைவு செய்யும் வகையில் உள்ளன. சுமார் ஒன்றரை டிரில்லியன் டன்கள் அளவுள்ள மாங்கனீசுக் கட்டிகள் (Manganese nodules) கடலின் தரையில் சிதறிக் கிடக்கின்றன. தாமிரம, அலுமினியம், நிக்கல், இரும்பு, கோபால்ட், மாங்கனீசு போன்ற பல்வேறு கனிமங்கள சேர்ந்தவையே மாங்கனீசுக் கட்டியாகும் கடல்வாழ் நுண்ணுயிரிகள் இந்த மாங்கனீசுக் கட்டிகளை உருவாக்குவதில் பெரும்பங்கு வகிக்கின்றன. கடல் தரையிலிருந்து கனிமங்களை எடுக்கும் முறைகள் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளைச் சேர்ந்த பல நிறுவனங்கள் இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளன. நம்நாட்டில் பம்பாய்க்கு அருகில் கடலிலிருந்து பெட்ரோலும் எடுத்து வருகின்றனர்.

கடலிலிருந்து உணவு:

பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவுப்பெருக்கம் அமையவில்லை. எதிர்காலத்தில் மனிதன் உணவுக்குப் பெரும்பாலும் கடலையே நம்பி இருக்க வேண்டிவரலாம். ஜப்பான், நார்வே போன்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது நம் நாட்டில் பிடிக்கப்படும் மீன்களின் அளவு குறைவு நீண்ட கடற்கரையைக் கொண்ட நம் நாட்டில், மீன்பிடிப்பை நவீனமயமாக்குவதன் மூலம் உணவுப் பஞ்சத்தை ஓரளவு போக்கலாம்.

கடல் தாவரங்களைப் பயன் படுத்தும் முறை நம் நாட்டில் இன்னும் வேரூன்றவில்லை. ஜப்பான் இத்துறையில் நன்கு முன்னேறியுள்ளது. கடல் நாணலை அவர்கள் உணவாகப் பயன் படுத்துகின்றனர். கடல்நாணலில் மிகுந்த அளவு புரோட்டின் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. புரோட்டின் இரண்டரை கிலோ வெண்ணெயில் உள்ள சத்து அல்லது இருபது லிட்டர் பாலில் உள்ள சத்து ஒரு சிறு கரண்டி காட்மீன் எண்ணெயில் இருப்பதாக கண்டுபிடித்துள்ளனர். நம்நாடு புரோட்டின் பற்றுக்குறையுள்ள நாடு. குழந்தைகள் புரோட்டின் பற்றுக்குறையினுல் பல நோய்களுக்கு ஆட்பட்டு சிறு வயதில் மடிகின்றன. மீன்துறையை நவீனமயமாக்கி மேற்கண்ட திட்டங்களை நன்முறையில் செயல் படுத்திஞல் பெரும்பாலான சிக்கல்கள் தீரும்

நாட்டுத் தெய்வங்கள்

காளியம்மன் 4,

சென்ற இதழ் தொடர்ச்சி...... க. சின்னப்பா

வழிபாடுமுறை:- செந்தமிழ்க்கல்லூரி

*"ஒவ்வொரு மக்களினத்தாரும் தங்கள் முயற்சிக்குத் தாங்கள் எதிர்பார்த்த பலன் கிட்டாத போதும் எதிர்காலப் பயனைக் கருதியும் அச்சங்காரணமாக வரும் இடையூற்றை நீக்குதற் பொருட்டும் தெய்வத்தின் துணையை நாடுதல் இயல்பு; அங்ஙனம் நாடும்போது தாங்கள் வழிபடும் தெய்வத்தை மகிழ்விப்பதற்காகத் தங்களுள் பெரியோர்களுக்கும், அரசர்க்கும், விருந்தினர்க்குஞ் செய்யும் மதிப்புச் செயல்களைத் தெய்வத்திற்குச் செய்வர்; அது பூசனை எனப்படும்" - என்பார் கா சு. பிள்ளையவர்கள்

சமயம் என்னும் சொல்லே சமைக்கப் பெற்றது எனும் பொருளில் ஒரு தெய்வத்தை வழிபடுவதற்கு வகுக்கப் பெற்ற நெய்யினைக் குறிப்பதாகும். சமையம் என்ற சொல் சமயம் என்று மருவிற்று. இது system என்ற சொல்லின் கருத்தைக் குறிப்பது.

காளியம்மன் கோவிலுக்கு விழா எடுப்பதற்காக இவ்வட்டாரத்து மக்கள் தங்களுக்கு வசதியானதொரு மாதத்தைப் பன்னூறு ஆண்டு-களுக்கு முன்னமையே தேர்ந்திருக்கின்றனர். இது பெரும்பாலும் கோடைகாலத்து மாதமாகவே இருக்கிறது; இதற்குக் காரணம் இவர்கள் நூற்றுக்குத் தொண்ணூறுபேர் விவசாயிகள்; அவர்களுக்கு ஓய்வு இருப்பது இக்கோடை மாதங்களில்தான் சான்றாகப் பங்குனி மாதமாக இருந்தால் இம்மாதத் தொடக்கத்தில் ஊர்ப்பெரிய மனிதர்கள் ஒன்று கூடி ஊர்க்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்ய 'தண்டோரா' போடச் சொல்லுகின்றனர்.

ஊர்க்கூட்டம் :

அரிசன இனத்தைச் சேர்ந்த தண்டோரக்காரன் 'காளி கோயில்ல வெள்ளிக்கெழம ராத்திரி பொதுக்கூட்டம்... எல்லாரும் வந்துருங்க சாமீ ...' என தண்டோர போட்டுச் சொல்-

---

* தமிழர் சமயம் - கா.சு. பிள்ளை பக்கம்-55 (கழகவெளியீடு)

கிறன். அவனுக்குத் தண்டோராக்கூலி 50 காசு (அரைப்பணம்) ஊர்ப் பொது பணத்திலிருந்து கொடுக்கப்படும். கிராமத்தில் இரவு என்பது சுமார் 9 மணி. பெண்களைத் தவிர முதியவர்களும் இளைஞர்கள் சிலரும் கூடுகின்றனர். பெண்களுக்குத் தங்கள் கருத்துக்களைக் கோவில் கூட்டத்தில் வந்து சொல்ல உரிமைகிடையாது; ஆண்களுக்கு அடங்கியவர்கள்தான் பெண்கள் என்ற கருத்து கிராமத்தில் வலுப்பெற்றிருப்பதே இதற்குக் காரணம். இன்னும் ஒரிரு இன்றியமையாத ஊர்ப்பெரிய மனிதர் அன்றைய ஊர்க்கூட்டத்திற்கு வரவில்லையென்றால் அழைத்துவர 'தண்டல் காரரை' அனுப்புவார்கள், கோவில்வரி வசூலிப்பதோடு சில எடுபிடிவேலைகளையும் செய்ய வேண்டும் என்பது தண்டல்காரருக்கு விதிக்கப்பெற்ற ஊர் நியதி. இதற்காக அவருக்குச் சில சலுகைகள் தொன்றுதொட்டு வழங்கப்பட்டு வருகின்றன. இவற்றுக்குத் தண்டல் சலுகைகள் என்றுபெயர்.

அவையாவன:- (1) அவர் கோவில் வரி செலுத்த வேண்டியதில்லை

(2) அறுவடைக்காலத்தில் 'தண்டல கட்டு' என்று ஒவ்வொரு குடும்பத்தாரும் அறுவடை தினத்தன்று சிறிய நெற்கதிர்க்கட்டொன்று கொடுக்கவேண்டும்.

(3) கோவில் கும்பிடும்போது அவருக்கு நான்கு முழ வேட்டியும் உருமாத்துண்டொன்றும் (தலைப்பாத்துணி) வழங்க வேண்டும். இம்மூன்றும் தண்டல்சலுகைகளாகும். தண்டல்காரருக்கு வழங்கப்பெற்ற முதல்சலுகையும் மூன்றாவது சலுகையும் கோவில் பூசாரிக்கும் மணியக்காரருக்கும் உண்டு. தண்டல்காரர் சென்று அவர்களை அழைத்துவருவார். அல்லது வராததற்கான காரணம் கேட்டுவந்து சொல்லுவார், சிலபோது வரமுடியாத முக்கியஸ்தருக்காக (மனவருத்தத்தோடு) ஊர்க்கூட்டம் தள்ளி வைக்கவும் பெறும்.

விழா நாளை முடிவு செய்தல்:-

ஊர்கூடிவிட்டது, வரவேண்டிய பெரிய மனிதர்களும் ஏறத்தாழ வந்துவிட்டார்கள். அனைவரது முன்னிலையிலும் ஒரு அரிக்கன் விளக்கு கண் சிமிட்டிக்கொண்டிருக்கிறது. அது கோவிலுக்காக வாங்கப்பெற்ற பொதுவிளக்கு 'நிலா வெளிச்ச(ம்) நல்லாருக்கு; அத அமத்திவையுங்கப்பா' என்ற கனத்தகுரல் கேட்டு அது அமைதியடைதலும் உண்டு. மின் விளக்கு வசதிபெற்ற கோவிலுக்கு இது தேவையில்லை.

"பூசாரி இருக்காருல்ல?"

"மணியக்காரர் வந்துருக்காரா?"

"நம்ம ஊரு நாட்டாமை இருக்காரா?"—இந்த வினக்கள் அவர்கள் கண் எதிரே அமர்ந்திருந்தாலும் கேட்கப்படவேண்டும் என்பது மரபு. இம்மரபால் வினத்தொடுக்கும் பெரியவர் கூட்டத்திலுள்ள சில இளைஞர்களின் கிண்டலுக்கு ஆளாகிருர். பெரியவரது அடுத்தவின நாட்டாண்மைக் காரரைப் பார்த்து "என்ன நாட்டாமக்காரரையா...எதுக்கு இங்க கூடியிருக்கீங்க''......"என்னமோ ஆத்தா கோயில் கும்புடனுமுன்னு நம்ம ஊருப் பெரியவங்களெல்லாந் தண்டோராப் போட்டுருக்காங்க...என்ன தண்டல்காரரே அப்படித்தானையா?' இது நாட்டாண்மைக்காரரின் முதல்விடை. "ஆமாங்க... அப்படித்தா(ன்) என்பது தண்டல்காரரின் ஆமோதிப்பு.

"...சரி, எப்பக் கும்புடுவோ(ம்)?"—இது பெரியவர்.

"இந்த மாசம் வளர்பிறையில் வர்ர..மொத வெள்ளிக்குக் கும்புடனுமுன்னு நாளைக்குச் செவ்வாய்க்கிழமை சாட்டிடனு(ம்)'' எனக் காலண்டரைப் புரட்டிக் கொண்டோ பஞ்சாங்கத்தைப் பார்த்துக்கொண்டோ நாட்டாண்மை சொல்லுவார். அத்தோடு அதை மணியகாரரிடம் கொடுத்து 'சரிதானுன்னு பாருங்க' என்பார். 'நீங்க சொன்னுத் தப்பாவா இருக்கப்போவுது'—என்று சொல்லிக் கொண்டே அவரும் பஞ்சாங்கத்தை உற்றுப் பார்ப்பார்

"...சரி...குடும்பத்துக்கு எவ்வளவு வரிப் போடுறது?..."— இப்படிப் பெரியவர் தொடர்கின்ருர்.

"போன வருச(ம்) அஞ்சு ரூபாம் போட்டோ(ம்) .. இந்த வருச(ம்)?

விலைவாசி ஏறிருக்கு அத்தோட நாடக(ம் கரக(ம்)... எல்லா(ம்)...

வெக்கனுமுன்னு பேசுருங்க அதனல பத்து ரூபாய் போட்டாத்தான்

கட்டு(ம்)'' — என்று நாட்டாண்மைக்காரர் சொன்னதும் கூட்டத்தில்

சலசலப்பு வந்துவிடுகிறது. "அவனுக்கென்ன பணக்காரெஞ் சொல்லுவா(ன்) என ஒரு சிலரும் "அவரு சொல்லுறது சரிதானேயா" என மறுசிலரும் 'மரியாதையாப் பேசு' என்று ஆளுக்காளும் குய்யோ முறையோ எனச் சத்தம் போட்டுக் கொள்கின்றனர். யார் யாரையும் சமாதானம் செய்ய முடியாமல் கூக்குரலிட தூங்கிக் கொண்டிருந்த பெண்களெல்தாம் ஓடிவந்து வேடிக்கை பார்த்து அவரவர்களுக்குத் தெரிந்த நியாயங்களை அவர்களுக்குள் பேசுகின்றனர் (ஒருமுடிவுக்கும் வரமுடியாமல் இப்படியே கூட்டம் கலைந்துவிடுவதும் உண்டு) முடிவாகப் பெரியவர் எழுந்து அதட்டி இருதரப்பிலிருந்தும இரண்டிரண்டு பேரை அழைத்து, "தனியாகப் பேசி ஒரு முடிவு எடுத்துட்டு வாங்க; நாங்க இங்கேயே ஒக்காந்திருக்கோ(ம்)' என்று சொல்லி நான்கு பேரை அனுப்புகின்றார். அவர்கள் கூட்டத்தை விட்டுச் சென்று பத்து மணித்துளிகளுக்குள் திரும்பி வருகின்றனர். வரிபோடுவது முடிவாகிவிட்டது குடும்பத்திற்கு ஒரு ரூபாய்; அதற்குள் சாமியை நல்லமுறையில் கும்பிட்டு கரக ஆட்டமும் நாடகமும் நடத்த வேண்டும் இது முடிவு. இப்போது ஊர்க்கொட்டுகாரர்களுக்கு நாளையிலிருந்து சாற்று கொட்டு கொட்ட வேண்டும் எனக் கட்டளை பிறப்பிக்கப் பெறுகிறது.

இடைப்பட்ட நாட்கள்:- சாற்றப்பட்ட நாளில் இருந்து விழாநாள் வர பதினைந்து நாட்கள் இடைவெளி இருக்கிறது. இந்தப் பதினைத்து நாட்களும் விழாவிற்கு முன் அறிவிப்பு போன்று சாற்றுதல்கொட்டு தாரைதப்பட்டை முழங்க ஊர்சுற்றிவரும், சிறுவர்கள் மிக மகிழ்ச்சியாக கொட்டுக்கு ஏற்றபடி ஆடிக்கொண்டும் மகிழ்ச்சியை காட்டி ஒலி எழுப்பிக் கொண்டும் கொட்டுக்கரர்களை அவர்களது வீட்டில் கொண்டு போய் விட்டுவிட்டு வருகிறார்கள். சாற்றுதல் கொட்டு முடிந்தவுடன் அவ்வூர்ப் பெண்கள்-குறிப்பாகத் திருமணம் ஆகாத கன்னிப்பெண்கள் கோவில்முன் கூடுகின்றனர். கூடி அம்மன் பெயரைப் பரவிக் கும்மியடித்துப் பாடுகின்றனர். இதற்குத் நாளுந் கொட்டுதல் என்று பெயர். கும்மியடித்து முடிந்தவுடன் குதூகலமாகப் பல்வேறு விளையாட்டுக்களை உடலும் உள்ளமும் ஒயும்வரை ஆடி மகிழ்கின்றனர். கிளித்தட்டு, இராஜாராணியாட்டம். பூசணிக்காய் ஆட்டம், குலைகுலையாய் மந்திரிக்காயாட்டம், மாமாதுமன்னவன் வந்தானடி விளையாட்டு, இதுபோன்ற இன்னும் பல விளையாட்டுக்களை அவர்கள் எவ்வாறு எண்ணுகின்றார்களோ அதுபோன்ற விதிகளை அமைத்துக் கொண்டு விளையாடி மகிழ்கின்றனர். விழாக்காலத்தில் பெண்டிரது அன்றாட விளையாட்டு ஆடவர்களுக்கு வேடிக்கையாகவும் கேலிக்கு இடமாகவும்

அமைகின்றன. இளைஞர்கள் தங்கள் பங்கிற்குச் 'சடுகுடு' ஆடுகின்றனர். சிறுவர்கள் 'திருடன்—போலீஸ்' விளையாட்டு ஆடி மகிழ்கின்றனர். பதினைந்து நாட்களிலும் இரவின் முன்பகுதி கிராமத்து மக்களைக் காந்தமாகக் கவருகின்றது.

பணவசூல்:- கோவில் வரிவசூல் வசதிக்காகக் கிராமத்துக் குடும்பங்களில் இருந்து பத்துக் கொத்துக்கள் வரை பிரிக்கப்பட்டுள்ளன. ஒருவகையருவின் மூத்த குடும்பத்தைச் சேர்ந்த மூத்தவர் ஒருகொத்தின் தலைவராகிறார். இவரது கொத்தின் வரிகளை இவர் வசூல் செய்து தருவார், இவரிடம் கொடுக்க விரும்பாத இவரது கொத்தைச் சேர்ந்த ஒருசிலர் இருப்பின் அவர்கள் தண்டல்காரரிடம் வரியைக் கொடுக்க வேண்டும். வேண்டுமென்றே வரிகொடுக்காது யாராவது புறக்கணிப்படுவார்களேயானால் அவர்கள் ஊர்மக்களால் புறக்கணிக்கப்படுவார்கள். எனவே எப்படியும் விழாத்தொடங்குவதற்கு முன் அல்லது விழமுடிவதற்குள் வரிகள் அனைத்தும் வசூலிக்கப்பட்டுவிடும். கொத்துக்களின் தலைவர்கள் வசூலித்த வரிப்பணங்கள் அனைத்தும் கிராமத்துப் பொதுப் பெரியவரிடம் ஒப்படைக்கப் பெறும். இவர் 'பெரிய கொத்தனர்' என்றும் அழைக்கப் பெறுவார் வரவுசெலவுக் கணக்குக் குழுவிற்கு இவரே தலைவராவார்.

வரிகள்:- அம்மன் கோவிலுக்கு வசூலிக்கப் பெறும் வரி மூவகைப் பெயர் பெறும். அவையாவன; (1) குடும்பவரி

(2) பெண்பிள்ளைவரி

(3) இளவட்டவரி

(1) குடும்பவரி என்பது குடும்பத்தில் உள்ள திருமணமான ஆண்மக்கள் செலுத்த வேண்டிய வரியாகும்

(2) பெண்மக்களுக்கு வரி கிடையாது விரும்பினல் அவர்கள் விருப்பப்பட தொகையை பெண்பிள்ளைவரி (பொம்பளவரி) என்ற பெயரில் கொடுக்கலாம். அதற்காக அவர்களுக்கு விழாமுடியும்போது மரியாதை செய்யப்படும் அவர்களுக்குச் செய்யப்படும் மரியாதை 'அம்மன் பிரசாதம் என்ற பெயரில் ஒருமூடிதேங்காய், இரண்டு வாழைப்பழம், ஒரு கரும்புவெட்டு, விபூதி ஆகியனவாகும்.

(3) விழாச்சிறப்படைவதற்காக திருமணமாகாத இளைஞர்களும் 'இளவட்டவரி' என்ற பெயரில் பணம் சேர்த்துத்தரலாம். வசூலான வரிகள் அனைத்தையும்விட செலவு மிகுதியாக இருப்பின் 'மடக்குவரி' என்ற

பெயரில் குடும்பங்கள் தோறும் சிறுதொகையை விதித்து வசூல் செய்ய லாம். ஆனால் மடக்குவரி விதிக்கும் நிலை பெரும்பாலும் ஏற்படுவது கிடையாது. பெண்பிள்ளைவரியும் இளவட்டவரியும் கூடக் கிராமத்துப் பொதுப் பெரியவரிடம் பொதுவாகக் கொடுத்து வைக்கப்பெறும்.

கால்கோள் விழா:-

வளர்பிறை முதல்வெள்ளியில் விழா நடக்கும் கோவிலுக்குப் பந்தல் போடவேண்டும். அதற்காக விழாவிற்கு ஒருவாரம் இருக்கும் போது முகூர்த்தக்கால் ஊன்ற வேண்டும், இதற்காக நல்ல நேரம் குறித்து அம்மனுக்குத் தேங்காய் பழம் உடைத்துப் பத்தி-சாம்பிராணிப் புகையூட்டி கற்பூரம் காட்டி அபிஷேகம் நடைபெறுகிறது. சந்தனமும் குங்குமமும் கோவிலில் இருந்து தொட்டு வைக்கப் பெறும் முகூர்த்தக்-கால், சுண்ணும்பாலும் செம்மணலும் வர்ணம் பூசப்பெற்று உச்சியில் மாவிலை கட்டப்பெற்றிருக்கிறது. இல்லறவாழ்க்கையில் ஈடுபடும் காலம் கழிந்த, மூப்படைந்த மூன்று முதியவர்கள் தொட்டு ஊன்ற முகூர்த்தக்கால் நாட்டப்பெறுகிறது. உடைக்கப்பட்ட தேங்காயைச் சில்லாக்கி அவ்விடத்தில் அவ்வமயம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கின்ற சிறுவர்களுக்குக் கொடுக்கின்றார்கள். முகூர்த்தக்கால் ஊன்றிய மறுநாளோ இரண்டாம் நாளோ விழா-விற்கான பந்தல் வேயப்பெறுகிறது.

பொதுவாகக் கிராமத்துக் காளியம்மன் பொங்கல் விழா குறைந்தது மூன்றுநாட்கள் நடைபெறுகின்றன. பொங்கலுக்கு முதல்நாள் மாலையில் விழா தொடங்கிவிடுகிறது. கோவில் மின் விளக்குகளால் அலங்காரம் செய்யப்பட்டு ஒலி பெருக்கிகள் திரைப்படப் பாடல்களை ஒலி பரப்பிக் கொண்டிருக்கின்றன, பாவிலைகளையும் வேப்பங்குலைகளையும் தோரணமாகக் காட்டிப் பந்தலைச்சுற்றிக் கட்டுகின்றனர். ஊரினது ஒவ்வொரு வீதியையும் மறைத்துக் கொடித்தடைக் கயிறுகள் கட்டுகின்றனர். கோவில் பெரிதாக இருந்து, கோவிலில் கொடிமரம் இருந்தால் விழாச் சாற்றப் பெற்றதற்கு அடையாளமாகக் கொடியேற்றப் படுகிறது. விழாமுடிந்த பிறகுதான் இக்கொடி இறக்கப்படும். இதற்குக் 'கொடிக்கட்டுதல்' என்று பெயர். கொடி கட்டிய ஞான்று ஊரில் இருந்தவர்கள் விழாநாளன்று எந்தக் காரணத்தைக் கொண்டும் வெளியூரில் தங்கி-விடக் கூடாது. தங்கினால் அது சாமிகுற்றமாகக் கருதப்பெறும், இதற்குக் கொடித்தடை என்று பெயர். கோவில் முன்பும் பந்தல்

வாசல்களிலும் வாழைமரங்கள் நாட்டப்படுகின்றன. சில கிராமங்களில் கோவிலை அலங்கரிக்க மதுரைவந்துகூட அலங்கார வேலைப்பாடுகள் செய்யும் ஆட்களை அழைத்துக் கொண்டு செல்லுகின்றனர். இரவு ஒன்பதுமணி சுமாருக்கொல்லாம் அலங்கார வேலைப்பாடுகள் முடிவடைகின்றன. அம்மன் சிலையை—சிலையில்லாத ஊர்களில் சூலாயுத்தை—எண்ணெய்க்காப்புச் சாற்றி மஞ்சள் நீராட்டுகின்றார்கள். சந்தனக் காப்புச் சாற்றி மாலை அலங்காரத்தோடு அம்மன் காட்சியளிக்க, பம்பை, உடுக்கு, தமுக்த ஆகிய வாத்தியக் கருவிகள் ஒலி எழுப்புகின்றன. கிராமத்து மக்கள் கோவில் முன்னால் கூடி பயபக்தியோடு கைகூப்பிநிற்கிறார்கள். அலங்காரம் செய்யப்பெற்ற அம்மனையும் அம்மன் கோவிலுக்கு எதிரே இருக்கும் வீதியையும் மாறி மாறிப் பார்க்கிறார்கள்

அரைமணி நேரத்திற்குக் குறையாமல், கொட்டு ஒலியும் குலவைச் சத்தமும் தொடர்ந்து காதைப் பிளக்கின்றன மக்கள் எதிர்பார்த்து நோக்கி இருந்த வீதிவழியே ஒரு பெண் தலைவிரி கோலத்தோடு உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை நீர் சொட்ட ஈர உடைகளோடு ஒரு கை கட்டை விரலை மற்றொருகை பிடிக்கச் சுண்டி உதறி உதறி ஆவேசமுற்று ஆடிக்கொண்டு வருகிறாள். அவ்வாறாகக் கோவிலின் முன் வந்து ஆவேச முற்று ஆடிக்கொண்டு பெண் அம்மனை உற்றுப் பார்க்கிறாள். பெண்கள் குலவையொலி விண்ணைப் பிளக்கின்றது. பம்பையும் உடுக்கையும் காதைப் பிளக்கின்றன, கோவில் மணி நா கண்ணில் தெரியவில்லை, காது செவிடுபட அலறுகின்றது, பூசாரி பயந்து பணிந்தவராக ஓர் உருண்டைச் செம்பிலிருந்த மஞ்சள் நீரை எடுத்துச் சாமியாடி முன் நீட்டுகின்றார். சாமியாடி என்றபெயர் மருளாடி அம்மனாடி என்ற இரண்டு சொற்களுக்கும் பொதுப்பெயர். பெண்தெய்வம் பெண்ணின் மீதும் ஆண்தெய்வம் ஆடவரின் மீதும் வரும். பெண் தெய்வச் சாமியாடிக்கு அம்மனாடி என்றும் ஆண் தெய்வச் சாமியாடிக்கு மருளாடி என்றும் இவ்வட்டாரத்தில் பெயர் வழங்குகிறார்கள். அம்மனாடி வந்தபெண் அம்மஞ்சள் நீர்ச்செம்பை வாங்கித் தலைக்கு மேல் தூக்கி அன்னாந்து அப்படியே வாயில் ஊற்றிக்கொள்கிறாள். வாயின் உள்ளேயும் வெளியேயும் மஞ்சள் நீர் மறைகிறது இதற்கிடையில் வரங்கேட்டு அம்மனாடியின் காலில் நான்கு ஐந்து பேர் விழுந்திருக்கிறார்கள். அம்மனாடி அவர்கள் ஒவ்வொருவரையும் ஆடிக்கொண்டே அருளோடு எழுப்புகிறாள். அவர்கள் விழுந்து வேண்டிய

வரத்தைத் தருவதாகக் கூறுகிறாள். அவர்களை அதற்குக் காணிக்கை யாக 'ஆத்தாளுக்கு அக்கினிச் சட்டி எடு' என்றும் 'கோவிலில் தொட்டிகட்டிப்போடு' என்றும் கட்டளை இடுகிறாள். இவை முடிய பூசாரி கரசச்செம்பை எடுத்து அம்மனாடியிடம் கொடுக்க அவன் வாங்கித் தலையில் வைத்துக்கொண்டு அருள் குறையாமல் ஓட்டமும் நடையுமாகக் கோவிலைவிட்டு வெளியேறுகிறாள், வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த மக்களும் அவனைத் தொடர்கின்றனர்.

தெய்வம் அழைத்தல்:

ஊருக்கு வெளியேயுள்ள 'காட்டுமாரியம்மன்' கோவிலுக்கு வருகின்றனர். சில கிராமங்களில் அவ்வூர் ஆற்றிற்கு வருகின்றனர். பேராறுகள் இல்லையென்றாலும் திருமங்கலம் வட்டாரத்தில் காட்டாறு-கள் உள்ளன. ஆற்றின் கரையருகே சூலாயுதம் தாங்கிய காளி கோவில் பீடம் உண்டு. இக்கோயிலுக்கு முன்னால் அம்மனாடியிடம் கரச் செம்பைப் பூசாரி வாங்கி இரவில் அக்கோவிலுக்கு மாலைசாற்றிக்க கற்பூரம் கொளுத்திப் பூசை செய்கிறார். இரவின் இருளைப் போக்க இரண்டு மூன்று கூலிகள் 'பெட்ரோமாஸ் விளக்கைச் சுமந்து கொண்டு நிற்கின்றனர். அங்கு பூசனை முடிந்தபிறகு கரகச் செம்பு கொணர்ந்து நிரப்பப் பெறுகிறது. ஆறே இல்லாத நகரங்களில் நீர்நிலைகளில் இருந்து நீர் கொண்டு வருகிறார்கள். அக்கரகச் சொம்பின் மீது தேங்காயை வைத்து மூடி அதைச்சுற்றிப் பூஅலங்காரம் செய்து உச்சியில் ஓர் எலுமிச்சைப் பழத்தை வைத்து நூலால் கட்டி மீண்டும் தாரை தப்பட்டைகள் முழங்கக் கிராமத்திற்குக் கரகம் கொண்டு வந்து சேர்க்கப் பெறுகிறது இதற்குத் தெய்வம் அழைத்தல் என்று பெயர்.

சக்தியாட்டமும்-ஆட்டக்கரகமும் :-

கிராமத்து அம்மன் வழிபாட்டிற்கான இக்கரகஆட்டம் 'சக்தியாட்டம்' எனப் பெயர் பெறுகிறது. வியாழக்கிழமை நள்ளிரவோடு இந்நிகழ்ச்சிகள் முடிந்துவிடுகின்றன. இச்சடங்குகளின்போது வருண பகவானுக்கு உரிய கடல்களும் புனித ஆறுகளும் கிராமத்தில் அடங்கி இருப்பதாக நம்பிக்கை. எனவே காளியம்மனை வழிபடுகின்றவர்கள் கரகச்சொம்பிலிருந்து வெளிவரும் நீர் தங்கள் உடல்மீது பட்டதும் புனித நீராடிய பயனைப் பெற்றதாக தலைமுறை தலைமுறையாக நம்பி

வருகின்றனர்- *மேய்ச்சலை முக்கியத் தொழிலாகக் கொண்ட பழந் தமிழர்கள் தண்ணீரை தங்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாப் பொருளாகக் கொண்டது இயல்பே; எனவே அவர்கள் மழைத் தெய்வமாக மாரி (மாரிமழை) யம் மனையும் வழிபடத் தொடங்கினர். இந்தப் தெய்வங்களைப் போற்றக் கரக ஆட்டம் ஏற்பட்டது. படிப்படியாக இதையொட்டிய சடங்குகள் பல்கிப் பெருகின"

தொழிலாக வருவாய்க்கு ஆடுவது ஆட்டக்கரகம். பொங்கல் விழா முடிந்த மறுநாள் இரவு மக்கள் வேடிக்கை பார்த்து மகிழ்வதற்காக இது நடத்தப்பெறும். ஆற்றல் உள்ள எவரும் எங்கு வேண்டுமென்ருலும் இதை ஆடலாம். கரகத்தைத் தலையில் தாங்கி ஆடுபவருக்குத் துணையாக பம்பை உருமி, தவுல், நாதஸ்வரம், தமுக்கு ஆகிய பக்க வாத்தியங்கள் முழங்கும். தண்ணீருக்குப் பதிலாகக் கரகம் நிறைய அரிசியை வைத்துக்கொண்டு ஆடுவதும் உண்டு. ஒரு பொது இடத்திலிருந்து புறப்பட்டுக் கரகக்காரர்கள் கோவிலுக்கு ஊர்வலமாக வருவார்கள். பக்கவாத்தியகாரர்களின் முழக்கத்திற்கு ஏற்பக் கரகம் ஆடுபவர்களின் ஆட்டத்தில் வேகமும் விறுவிறுப்பும் இருக்கும். எப்படித்தான் அவர்கள் தலைகீழாக ஆடினுலும் தலையில் இருக்கும் கிரகம் கீழே விழாது. கரகத்தோடு வேறு பல விளையாட்டுக்களையும் வேடிக்கைகளையும் நிகழ்த்திக் காட்டுவார்கள். இறைவனே கரகக் காரர்களின் உடலுக்குள் புகுந்து கரகத்தைத் தாங்கிக் கொள்ளுவதாகக் கிராமத்து மக்கள் நம்புகின்றனர்.

அக்கினிச் சட்டி:-

வெள்ளிக் கிழமைக்காகப் பொழுது விடிந்து கொண்டிருக்கிறது. இன்று காளியம்மனுக்குப் பொங்கல் வைக்க வேண்டும். (ஒவ்வொரு கிராமத்திலும் வசதிக்குத் தகுந்தாற் போன்று கிழமைகள் மாறுபடலாம்) பொங்கலன்றி காலையில் அம்மனுக்கு அக்கினிச் சட்டி எடுப்பதாக நேர்ந்து கொண்டவர்கள் தனித்தனியே கொட்டுக்ள் வைத்துக் கோவிலுக்கு அக்கினிச் சட்டியைக் கொண்டு வருகிருர்கள். ஆண்களும் பெண்களும் நேர்ந்து கொண்டவர்கள் அனைவரும் அக்கினிச்சட்டி எடுக்கலாம். இதற்காகத் திருமங்கலம் சென்று வர்ணம் பூசப்பெற்ற

தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும் — 'சோமலே' பக் 197.

புதிய மண்சட்டிகள் வாங்கி வருகின்றனர். அகலமான வாய் வளையங்களும் கீழே குவிந்தும் இருக்கின்ற இச் சட்டிகள் ஒர் அறைவட்ட வடிவில் குறுக்காக அறுக்கப் பெற்ற கோல வடிவில் காட்சியளிக்கின்றன. இச் சட்டிகளின் அடிப்பகுதியில் ஈரமாக்கப் பட்ட தூய்மையான ஆற்று மணலும் அதற்கு மேல் தவிடு அல்லது உமி பரப்பி அதற்கு மேல் வேப்பம் பட்டைகளையும் வேப்பஞ்சுள்ளி களையும் போட்டு நல்லெண்ணை ஊற்றித் தீ வளர்க்கின்றனர். எந்த விதமான பாதுகாப்புமின்றி நேரடியாகப் பட்டைகளையும் சுள்ளிகளையும்போட்டுத் தீ வளர்க்கின்றவர்களும் உண்டு.

அக்கினிச் சட்டி எடுப்பதாக நேர்ந்துகொண்டவர்கள் மஞ்சள் ஆடை அணிந்து ஈரத்துணியோடு தீச் சட்டி அருகே வந்து நிற்கின்றார்கள். உடுக்கை ஒலி எழுப்பிப் பூசாரி அவருக்குச் சாமி வந்து இறங்கும் படிப் பாடுகிறார். உடுக்கைக்குப் கோடாங்கி என்றொரு பெயரும் உண்டு. பூசாரிக்குத் துணையாக உடுக்கையொலி எழுப்பப் பக்கத்துக் கிராமத்திலிருந்து புகழ் பெற்ற உடுக்கைக் காரர்கள் அழைத்துவரப் பெறுதலும் உண்டு, உடுக்கை அடித்துத் தெய்வங்கள் வந்திறங்கும் படிப் பாடவல்லவர்கள் உப்பிலிக் குண்டிலும் குதிரைச் சாரி குளத்திலும் உண்டு. உடுக்கைச் சத்தமும் குலவைச் சத்தமும் காதில் ஒலிக்க, நேர்ந்து கொண்டு வழிபட்டு நிற்பவருக்கு அருள் இறங்குகிறது. அவருக்குச் சாமி வந்திறங்கும் அதே நேரத்தில் அவ்விடத்தில் மேலும் சில பெரியவர்களும் சாமி வந்து ஆடுகின்றனர். குடும்பத்தில் இறை யுணர்வோடு தூய்மையாக ஒருவர் அக்கினிச் சட்டியை எடுத்துக் கொடுக்க நேர்த்திக் கடன் காரர் பெற்றுக் கொள்கிறார். தீ வளரும் சட்டியைத் தாங்கிப் பிடித்திருக்கும் அவர் கையில் வெப்பக் காப்பிற்காக வேப்பங்குலை தரப் படுகிறது. கூலிக் கொட்டுக்கள் முழங்க அவர் ஊரை வலம் வருகிறார். வீதி வலம் வரும் போது சில இல்லங்களில் அக்கினிச் சட்டிக்கு எண்ணெய் ஊற்றிகின்றனர். சட்டி சுமப்பவருக்காக அவரது உறவுக்காரர் ஒருவர் விபூதித் தட்டு ஏந்தி வருகிறார். சில குடும்பங்களில் காணிக்கையாக விபூதித்தட்டில் பணம் போடுகின்றனர், நெருங்கிய மாமன், மைத்துனன் போன்ற உறவுக் காரர்கள் அக்கினிச் சட்டி எடுப்போருக்கு மாலை, வேட்டி, துண்டு (பெண்களாக இருந்தால் புடவை) ஆகியவைகளை அணிவிக்கின்றனர். எவ்வளவு வெப்பக்காப்போடு அவர் வீதிவலம் வந்தாலும் நம் போன்றவர்களால் அரை நிமிட நேரம் அனலைத் தாங்கி அவர் அருகே நிற்க முடியவில்லை. இவ்வாறு கிராமத்துக் கோவிலுக்கு வந்து

அவர் தீச் சட்டியைச் செலுத்துகிறார். சில கிராமங்களில் ஊர் கோவிலுக்கு வெளியேயுள்ள காளி கோயிலுக்குச் சென்று தீச்சட்டி-யைச் செலுத்துவதும் உண்டு. பிள்ளை வரம் கேட்டு நிறைவேறி அதற்காக அக்கினிச் சட்டி எடுப்பவர்கள் தங்கள் குழந்தைகளை ஈர மஞ்சள் துணியால் தங்கள் கழுத்திலேயே தொட்டில் கட்டித் தொங்க விட்டுச் சுமந்து கொண்டு தீச்சட்டி எடுத்துக் காணிக்கை செலுத்த வருதலும் உண்டு. இக் குழந்தைகள் ஆறுமாதம் தொடங்கி மூன்று வயது வரை இருக்கலாம். அழுது அடம் பிடிக்கும் குழந்தைகள் கூடக் காணிக்கை செலுத்தும் வரை அசை வற்றிருப்பது நம் போன்-றோருக்குப் பெருவியப்பைத் தருகிறது. காரணம் அறிய முற்பட்ட போது 'அம்மன் அருளால் அக் குழந்தைகள் அமைதியடைகின்றன' என ஆத்தீகப் பெரியவர்களும், 'தீயின் வெப்பத்திற்கும் கொட்டுக் குலவைச் சத்தத்திற்கும் அஞ்சி, அரண்டு பேசாமல் மயங்கி இருக்-கின்றன' என நாத்திகம் பேசும் சில இளைஞர்களும் கூறுகின்றனர். இவ் வட்டாரத்தில் அக்கினிச் சட்டி எடுப்பவர்கள் ஒன்றிலிருந்து இரண்டு சட்டிகள் வரைதான் சுமக்கின்றனர். ஆனால் இத்திருவிழா-விற்கு விருதுநகர் புகழ் பெற்றது. அங்கு தலையிலும் இரண்டு கை களிலும் அக்கினிச் சட்டியை தாங்குவதோடு உடம்பில் தாங்கு கரு-விகள் பொருத்தி இருபத்தி யொரு சட்டிகள் வரை அக்கினி ஏழ இரத வீதியைச் சுற்றி வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சிகளாக இருக்கும்.

இக் காணிக்கையைச் செலுத்துவதாக நேர்ந்து கொண்டவர்கள், பொங்கல் சாற்றப் பெற்ற நாளில் இருந்து சில விரதங்களை மேற் கொள்ள வேண்டும். விரதம் என்ற வட சொல்லுக்கு மன உறுதி என்பது பொருள். அவை (1) ஒரு வேளை சைவ உணவுதான் சாப்பிட வேண்டும் (2) பாய்விரித்துப் படுக்கக் கூடாது. தரையில்தான் படுக்க வேண்டும் (3) சிற்றின்பம் அனுபவிக்கக்கூடாது.

(தொடரும்)

செய்திக் கதிர்

உஸ்பெக் மொழியில் இராமாயணம்

சோவியத் குடியரசு நாடுகளில் ஒன்ருகிய உஸ்பெகிஸ்தான் அண்மையில் 'உலக இலக்கியத்தொகுப்பு' ஒன்றனை உஸ்பெக் மொழியில் வெளியிட்டிருக்கிறது. கலை, இலக்கிய, உயர் கல்வி நிலையங்களில் பயன்படுத்தப்பட இருக்கும் இந்நூலில் இராம காதையின் பல்வேறு பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளன. உஸ்பெக் நாட்டைச் சேர்ந்த கவிஞரான முகமது அலி என்பார் இராமாயணம் முழுவதையும் அம்மொழியில் முன்னமேயே மொழி பெயர்த்துள்ளார். அம் மொழி பெயர்ப்புநூலின் பல பகுதிகளே இத் தொகுப்பு நூலில் இணைக்கப்பட்டுள்ளன. உரிய அனுமதியினைத்தந்து இராமாயணத்தைப்பற்றி உஸ்பெக் மாணவர்களும் அறிந்து கொள்ள ஒரு வாய்ப்பு அளித்தமைக்கு சோவியத் அரசினை நாம் மனமுவந்து பாராட்டுகிருேம். ஆனல் ஒன்று. இலக்கிய அணுகு முறையில் இரஷ்யர்கள் ஏனையோரைக் காட்டிலும் பெரிதும் மாறுபட்டவர்கள். 'கலை கலைக்காகவே' என்பதை விட 'கலை கட்சிக்காகவே' என்ற உணர்வுதான் அங்கு மேலோங்கி நிற்க முடியும். பழைய புதிய இலக்கியங்களைப் பிரச்சார நோக்கத்துடன் பார்க்கின்ற கண்ணேட்டம் அவர்களுக்குக் கைவந்த கலை. இராமாயணத்தின் எந்தெந்தப் பகுதிகளைப் பாடநூலில் சேர்த்துள்ளனர் என்பதை அறியக் கூடுமாயின் நாம் இதனை நன்ருகப் புரிந்து கொள்ள முடியும்.

கவிஞர் எழுதும் தமிழக வரலாறு:

அரசவைக் கவிஞர் கண்ணதாசன் தமிழகத்தின் வரலாற்றினைக் கவிதையில் எழுதவேண்டும் என்று தமிழக முதல்வர் கேட்டுக் கொண்டுள்ளார். கவிஞரின் 54-ஆவது பிறந்த நாள் விழாவில் பத்தாயிரம் ரூபாய் பரிசும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. அமைச்சரின் வேண்டுகோளை ஒத்துக் கொண்ட கவிஞரின் நீண்ட அரசியல் பயணம் கோணல் மாணல்களைக் கொண்டது; ஆயினும் அவருடைய கவிதைகள் அப்பழுக்கற்றவை. காலத்தை வென்று நிற்கும் திறம் படைத்தவை. கவியரசு எழுத இருக்கும் தமிழக வரலாறு இலக்கியக் கற்பனைக்கு அதிகமான இடம் கொடுக்காமல் வரலாற்றுச் செய்தி-

களுக்கு வலிவும் பொலிவும் கொடுக்கின்ற முறையில் அமைய வேண்டும் என்பது நமது வேண்டுகோள் கற்பனையின் ஓட்டம் அதிகமாகும்போது வரலாற்றுச்செய்திகள் பின்னடைந்து விடும். கற்பனையும் வரலாற்றுச் செய்திகளும் இரண்டறக் கலந்து நிற்பதனால், பழந்தமிழ் இலக்கியங்களைத் தமிழக வரலாறு படைக்கும் ஆய்வாளர்கள் முழுதுமாக ஒத்துக் கொள்வதில்லை. இந்தக் குறை ஏறத்தாழ பல்வேறு அயல்மொழி இலக்கியங்களிலும் காணப்படுகிறது கிரேக்கக்கவிஞன் ஹோரமர் எழுதிய இலியட், ஆடிஸி போன்ற காப்பியங்களை வைத்து கிரேக்க வரலாறு எழுத முடியவில்லை. வரம்பிகந்த கற்பனையினால் ஏற்படும் இச் சிறு குறையினைத் தவிர்த்து தமிழக வரலாற்றினைக் கவியரசு படைக்க வேண்டும்.

கண்மூடித்தனமான மதப்பற்று

திருச்சிக்கு அருகில் ரெங்கநாதபுரம் என்ற சிறு கிராமத்தில் பிறந்து எட்டாம் வகுப்பு வரை மட்டுமே பயின்றவர் கணேச அய்யர். தமிழகம் முழுதும் வாழ்கின்ற கத்தோலிக்கர்களின் தலைவராகச் சென்னையில் இருப்பவர் ஆர்ச் பிஷப் அருளப்பர் இருபது லட்ச ரூபாய் வரை பணம் பறித்து அய்யர் அருளப்பரை ஏமாற்றி இருக்கிறார். ஒரே சமயத்தில் இந்த ஏமாற்று வேலை நடக்கவில்லை. திட்டமிட்டு நடந்த இந்தப் பெரிய மோசடியில் அய்யர்வாள் ரோம், வாடிகன் போன்ற ஐரோப்பிய நகரங்களுக்கும் சென்று வந்திருக்கிறார். ஆர்தர் பால் என்று தற்காலிகமாகத் தமது பெயரை மாற்றிக் கொண்ட அய்யர் அருளப்பரிடம் சென்று திருவள்ளுவர் கிறித்தவரே என்று உறுதியாகக் கூறுதற்குரிய சான்றுகள் தம்மிடம் இருப்பதாகப் புளுகி இருக்கிறார். அதுமட்டுமல்ல. தமிழகத்தின் தலைசிறந்த பழங்கோவில்கள் ஆதிகாலத்தில் கிறித்தவர் கோயில்களாக இருந்தனவென்றும் கதை விட்டிருக்கிறார். உலகத்தில் உண்மைகளைத் திரித்துக் கூறுவோருக்கும், மாற்றி உரைப்போருக்கும் முழுதுமாகப் புளுகுவோருக்கும் பஞ்சம் இல்லை. ஆயினும் கேட்போருக்கு நிதான புத்தியும் சிந்தனைத் தெளிவும், அறிவுத் திண்மையும் இருந்தால் புளுகுவோன் வெற்றி பெற முடியாது. ஆர்ச் பிஷப் அவர்களின் திறமை, நேர்மை, அன்பு பொது நலப்பற்று ஆகியனவற்றில் யாருக்கும் ஐயம் இருக்கமுடியாது ஆயினும் கொஞ்சம் கொஞ்சமாக அருளப்பர் ஏமாற்றப்பட்டிருப்பதை எண்ணும்போது ஒன்று மட்டும் நமக்குத் தெளிவாகத் தெரிகிறது திருவள்ளுவரை கிறித்தவராகக் காணவேண்டும் என்ற அளவற்ற

ஆசையே அவரது அறிவுக் கண்ணை மறைத்திருக்கிறது மதப்பற்றுக்கும் அப்பாற்பட்ட மதவெறி இல்லாதிருந்திருக்குமாயின், தொடக்கத்தில் இல்லாவிடினும், பிறகாவது கணேச அய்யர் கையும் களவுமாகப் பிடிபட்டிருப்பார். குறள் தந்த வள்ளுவன் சாதி சமயப் பூசலுக்கு அப்பாற்பட்டவன்.

'மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்' என்று

சொன்ன ஞானி. தமிழகத்திலேயே அவனை வைணவன் என்றும் பௌத்தன் எனவும் சமணன் என்றும் கூறி குறிப்பிட்ட மதத்துக்குள் அடக்க விழையும் முயற்சிகளை நாம் காண்கிறோம். எந்த முயற்சியும் இறுதியாக வெற்றி அடைவதில்லை. வள்ளுவன் எந்த மதத்தைச் சேர்ந்தவன் என்று காணமுயல்வதினும், அவன் கூறிய உலகளாவிய நற்கருத்துகளை எப்படிச் செயற்படுத்துவது என்பதே இன்றைய உலகம் சிந்திக்க வேண்டுவதாகும்.

கலாச்சாரத் திருட்டு

பாஞ்சாலி சபதம் எழுத வந்த பாரதி சூதாடி நாடிழந்த தருமனைக் கடுஞ் சொற்களால் கண்டனம் செய்கிறான். நாட்டை ஆளும் மன்னன் அந்த நாட்டையே அடகு வைக்கும் கொடுஞ் செயலுக்கு ஒப்புமையாக இரண்டு செயல்களைக் கூறுகிறான்.

"கோயிற் பூசை செய்வோன்
சிலையைக் கொண்டு விற்றல் போலும்
வாயில் காத்து நிற்போன்
வீட்டை வைத்திழத்தல் போலும்
ஆயிரங்களான நீதி அவை உணர்ந்த தருமன்
தேயம் வைத்திழந்தான்—சீ! சீ! சிறியர் செய்கை
செய்தான்"

சிறியர் செய்கையாகப் பாரதி கூறுவனவற்றுள் முதலிடம் பெறுவது சிலையினை விற்கும் செயல். கடந்த பத்துப் பதினைந்து ஆண்டுகளாகத் தமிழகம் முழுதும் உள்ள பல்வேறு ஆலயங்களிலிருந்து சாமி சிலைகளும் அம்மன் விக்கிரகங்களும், நகைகளும், உண்டியல்களும் களவாடப்படுகின்றன. இப்படித் திருடிச் செல்லப்படும் சிலைகளை

விற்பதற்கும், வெளி நாடுகளில் காட்சிப் பொருளாக விற்பதற்கும் curio shops என்ற பெயரில் டில்லியிலும், பம்பாயிலும் நிறைய விற்பனை நிலையங்கள் உள்ளன. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சிவபுரம் நடராசர் சிலையை அமெரிக்காவிலிருந்து மீட்டு வருதற்குத் தாம் செய்த முயற்சிகளை ஓய்வு பெற்ற காவல் துறை அலுவலர் அருள் தமது வாழ்க்கை வரலாற்றில் கூறுகின்றார் பரவலாக நடக்கும் இந்த ஆலயத்திருட்டு இன்னும் ஐந்தாறு ஆண்டுகள் நீடிக்குமானால், தமிழகத்துக் கோயில்களில் எல்லாம் கற்சிலைகள் தான் மிஞ்சும். இந்தத் திருட்டுகளில் ஈடுபடுவர்கள் வறுமையின் காரணமாக இத் தொழிலுக்கு வருவதில்லை. லட்சக்கணக்கில் ஈட்ட வேண்டும் என்ற பேராசை பிடித்த பணப்பேய்கள் தாம் இச் செயலைச் செய்கின்றனர் என்று சொல்லப் படுகிறது. காவல் துறையினரால் கண்டு பிடிக்கப்பட்டு நீதியின் தீர்ப்புக்கு வரும் போது தண்டனை கடுமையாக இல்லை. சில ஆயிர ரூபாய் அபராதம் அல்லது ஆறுமாத தண்டனை என்கின்ற அளவோடு நீதிமன்றம் நின்று விடுகிறது. ஆனால் திருட்டு மட்டும் நிற்கவில்லை-கலாச்சாரம் பண்பாடு, தொன்மை, இறைமை, தூய்மை பற்றித் தொண்டை கிழியப் பேசும் அரசியல் வாதிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து கட்சிக் கண்ணோட்டத்தை மறந்து சிலைத்திருட்டில் ஈடுபடு-வோர், தூண்டுதலாக இருந்தோர் ஆகிய அனைவருக்கும் கடுந்-தண்டனை வழங்க வேண்டும். அதற்கேற்றவாறு மாநில அளவிலாவது சட்டத்திருத்தம் செய்ய வேண்டும். இது காலத்தாற் செய்யவேண்டிய அரும்பணியாகும் என்பதை அரசினர் கவனத்திற் கொள்ள வேண்டும்.

தமிழ் இலக்கிய மன்றத்தில் பாராட்டு விழா.

தலைமைக்காசாளராக பணி புரிந்தது பழனி நகர கூட்டுறவு வங்கி. செயலாளராகத் தொண்டு செய்தது தமிழ் இலக்கிய மன்றம் தமது இல்லத்துக்கு அவர் இட்டிருக்கும் பெயர் அப்பர் அகம் பழனி தமிழ் இலக்கிய மன்றத்தின் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் ஊன்று கோலாகவும், தோன்றாத் துணையாகவும் விளங்கிய இந்தத் தமிழன்பரின் பெயர் தா. க. நாட்டுராயன். பழனி இலக்கிய மன்றம் ஒரு பேச்சு மேடையாக மட்டும் இருக்கவில்லை ஒரு விநாயகர் ஆலயம், ஒரு நூலகம். ஏழை மாணவர்கள் கொஞ்ச நாட்களேனும் தங்குதற்குரிய அறை ஆகிய இவை அத்தனையும் அங்கு ஏற்படுதற்குத் தொடக்க கால முதல் அருந் தொண்டாற்றிய பெருமகன் திரு. நாட்டுராயன் அவர்கள்-பதவியிலிருந்து ஓய்வு பெற்றாலும் பண்டைத்தமிழ் இலக்கியம் பயில்-வதினின்றும் அவருக்கு ஓய்வு கிடையாது. நீறு பூசிய நெற்றி, தூய

வெண்ணுடை, மெலிந்த தேகம் — இவற்றின் ஒட்டு மொத்தமான இந்தத் தமிழ் உருவத்தை பழனி நகர இலக்கியப் பெருமக்கள் வழக்கறிஞர். வெங்கடாசலம் அவர்கள் தலைமையில் பாராட்டி மணி விழா எடுத்ததில் வியப்பேதுமில்லை தமிழறிஞர் கி. வா. ஜகந்நாதன், குன்றக்குடி அடிகளார், திருக்குறள் முனுசாமி ஆகியோரால் தமிழ்த்தொண்டர் என்று பாராட்டப் பட்ட நாட்டுராயன் அவர்கள் சற்றே உடல் நலம் குன்றி தற்போது நலமுடன் இருப்பது மகிழ்ச்சியான செய்தி. அறிஞர் பலரின் பாராட்டுகளோடு நமது உளமார்ந்த வாழ்த்துகளும் அவர்கட்கு உரியன. மணி விழா கண்ட இந்தத் தமிழ்த் தொண்டருக்கு அறுபடை முருகன் நீண்ட ஆயுளை நல்க வேண்டும்.

———

மணியம் பிரஸ்,
44-B, வெங்கடபதி அய்யங்கார் தெரு,
மதுரை-9